# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 10

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

June 2023

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5





**5 ஆகஸ்டு 2022 – 5 ஆகஸ்டு 2023**

**எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டை அனுசரிப்போம்**

# கர்நாடகா தேர்தல் முடிவுகள்: பாஜக மீதான மக்கள் கோபத்தின் வெளிப்பாடு – எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

ஆளும் பாஜகவுக்கு ஏற்பட்ட அவமான கரமான தோல்வி அக்கட்சி பின்பற்றிய ஊழல், வேலையின்மை, பெண்கள் மீது அட்டூழியம், மக்கள் விரோத, மாணவர், விவசாயிகள் விரோத கொள்கைகளால் ஏற்பட்டதாகும். இத்தோல்வியை அளித்த கர்நாடகா மக்களை நாங்கள் வெகுவாகப் பாராட்டுகிறோம்.

'ஆப்ரேஷன் கமலா' எனும் வியூகத்தின்மூலம் நீதிநெறிக்கு புறம்பான முறையில் அதிகாரத்தைக் கைப்பற்றிய அக்கட்சி கட்டுக்கடங்காத ஊழலிலும் வகுப்புவாதத்திலும் ஈடுபட்டது. விலையேற்றம், வேலையின்மை, கல்வி–மருத்துவத்தை தனியார் மயமாக்குவது போன்ற மக்களின் உண்மையான பிரச்சினைகளை அக்கட்சி அப்பட்டமாகப் புறந்தள்ளியது. மத்திய அரசாங்கமும்கூட ஏகபோக முதலாளிகளுக்கு ஆதரவான, விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் விரோதமான கொள்கை களை தொடர்ச்சியாக திணித்து வருகிறது. தங்களுக்கு நேர்ந்த பாலியல் அவமானங்களுக் கெதிராக பல மாதங்களாக மல்யுத்த வீராங்கனை கள் தெருவில் இறங்கி போராடிவரும் போதும்கூட மத்திய அரசாங்கம் அவர்களது நியாயமான

தொடர்ச்சி 4ம் பக்கம்

# போராடும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக பாராளுமன்றம் முன்பு கூடியிருந்த மகா பஞ்சாயத்து அமைப்பாளர்களை கைது செய்ததை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாக கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் **28.05.2023** அன்று வெளியிட்ட அறிக்கை:*

தனது பதவியை பயன்படுத்தி நீண்ட நாட்களாக பாலியல் தொல்லைகளை கொடுத்து வந்த இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும் குற்றவாளியும் ஆன பாஜக எம்பிஐ கைது செய்யக்கோரி டெல்லியில் போராடும் வீராங்கனைகளுக்கு ஆதரவாக பாராளுமன்றம் முன்பு பெண்களின் மகா பஞ்சாயத்து கூட்டுவதை முறியடிப்பதற்காக இன்று காலை அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் டெல்லி மாநில செயலாளர் ரித்து கௌஷிக், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஹரியாணா மாநில அமைப்பு கமிட்டி உறுப்பினர் ராஜேந்திர சிங், ஹரியாணா அகில இந்திய விவசாய விவசாயத் தொழிலாளர்கள் சங்க செயலாளர் ஜெயகரண் ஆகியோரை பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம் கைது செய்தது மிகவும் அடாவடித்தனமான சர்வாதிகார செயல் என நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

கைது செய்யப்பட்ட எமது தோழர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் பாஜக அரசாங்கத்தின் காரணமற்ற ஒடுக்குமுறைக்கு எதிராக போராடும் எமது கட்சி மற்றும் அதன் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் இப்பேராட்டத்திற்கு ஜனநாயக எண்ணம் கொண்ட மக்கள் அனைவரும் ஆதரவு தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம் ■



**மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக கொல்கத்தா ராஜ்பவனுக்கு முன்பாக மே 29, 2023 அன்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆர்ப்பாட்டம்**

# பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தையும் அறநெறியையும் தொழிலாளர்களிடம் கொண்டு செல்வீர்!

*[தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டான இவ்வருடத்தை அனுசரிக்கும் வகையில் அவரது படைப்புகளிலிருந்து சில அம்சங்களை பிரசுரித்து வருகிறோம். அவ்வகையில், தோழர் சிப்தாஸ் கோஷ் மேற்கு வங்க தோழர்களிடம் "பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தையும் அறநெறியையும் தொழிலாளர்களிடம் கொண்டு செல்வீர் என்ற தலைப்பில் **1974**ஆம் ஆண்டு தொழிலாளர்களிடம் அவர்" ஆற்றிய உரையின் ஒரு சிறிய பகுதியை இங்கு வழங்குகிறோம்.]*

ஒரு தேசத்தின் ஒழுக்க நெறி பலம் கட்டுக்கோப்பாக இருந்து மக்கள் கடைபிடிக்க சரியான சித்தாந்தமும் இருக்குமானால், நாட்கணக்கில் உணவின்றி தவிக்கின்ற, மிக மோசமான அடக்குமுறையையும் சுரண்டலையும்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# பள்ளிக்கல்வியை பின்னோக்கித் தள்ளும் தேசிய பாடத்திட்ட வரைபடம்

நாட்டின் ஒட்டுமொத்த பள்ளிக்கல்வியையும் மாற்றியமைப்பதற்கான மத்திய அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஏற்ப மற்றொரு முழுமையான ஆவணமாக தேசிய பாடத்திட்ட வரைபடம் தொகுப்பு **1** மற்றும் **2** தயாராகிவருகிறது. தேசிய கல்விக் கொள்கை (NEP) **2020** ஆவணத்தில் என்ன சொன்னார்களோ அதே போலத்தான் இந்த பாடத் திட்ட வரைபட ஆவணங்களிலும் பள்ளிக்கல்வி தொடர்பான கொள்கையின் பல்வேறு அம்சங்களை கருத்தியல் ரீதியாக நியாயப்படுத்துவதற்கான பகீரத முயற்சி செய்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றை நாம் இங்கே பார்க்கலாம்.

இந்த ஆவணம் பல இடங்களில், 'ஜனநாயக கண்ணோட்டம், விடுதலைக்கான பற்றுறுதி; சமத்துவம், நீதி, நியாயம்; பன்முகத்தன்மை, பன்மைத்தன்மை மற்றும் எல்லோர் நலனையும் உள்ளடக்கியதன்மை' போன்ற விழுமியங்களைப் போதிப்போம் என்று கூறியுள்ளது. இந்த ஆவணம் 'இந்தியாவை, நீடித்த ஏற்கத்தக்க சமமான துடிப்பான அறிவுசார் சமுதாயமாக மாற்றுவதற்கு பங்காற்றக்கூடியவகையில் இந்திய நெறிமுறைகள் அடிப்படையிலான கல்வி அமைப்பை, அனைவருக்கும் உயர்தரமான கல்வியை வழங்கி அதன்மூலம் இந்தியாவை உலக அறிவுசார் வல்லரசாக மாற்ற கனவு காண்கிறது'.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## பள்ளிக்கல்வியை பின்னோக்கித் தள்ளும் . . .

# மாணவர்கள் அரசுப் பள்ளிகளை விட்டு வெளியேறி தனியார் பள்ளிகளுக்கு ஓடும் நிலை துரிதமாகும்

1ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் பலமொழிகள் பேசும் நம்மைப்போன்ற நாட்டில் இந்தியை மட்டுமே ஒற்றை ஆட்சி மொழியாக திணிக்க எத்தனிக்கின்றனர். இதன்மூலம் பன்மைத்தன்மையை எப்படி கடைபிடிக்கமுடியும்? இதைப்போல பல உதாரணங்களை இந்த ஆவணத்தில் நம்மால் காட்ட முடியும்.

என்இபி 2020யின் மையப்புள்ளியாக இருக்கும் இந்திய அறிவு முறை (நேஷனல் நாலெட்ஜ் சிஸ்டம்) என்பதை எடுத்துக்கொள்வோம். அப்படி என்றால் என்ன என்று இந்த ஆவணம் விளக்க வில்லை. ஆர்எஸ்எஸ் பாஜக சங் பரிவார் போன்றோர் பேசுவதிலிருந்து பண்டையகால இந்தியாவில் வேதங்களில் இருப்பதாக இவர்கள் பேசுவதைத்தான் இந்திய அறிவு முறை என இந்த ஆவணம் குறிப்பிடுவதாக எடுத்துகொள்ள வேண்டும். இதன்மூலம் அறிவியலுக்குப் புறம்பான, வரலாற்றுக்கு புறம்பான, பகுத்தறிவற்ற கருத்துக்கள் அனைத்தையும் மாணவர்களின் மனதில் இளம்வயதிலேயே பதியவைக்க எத்தனிக் கின்றனர். யானைத் தலையுடைய 'பிள்ளையார்' என்பது இந்தியாவில் வேதகாலத்திலேயே பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை இருந்ததற்கான ஆதாரம் என்று மாணவர்களுக்கு பயிற்று விக்கின்றனர். யானை தலையை விட்டுவிடுவோம், துண்டிக்கப்பட்ட ஒரு தலையை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலமாக மீண்டும் ஒட்டவைக்க இன்றைய நவீன பிளாஸ்டிக் அறுவைசிகிச்சையால் முடியுமா? இந்த கதையை கூறுபவர்களுக்கு ஒன்று பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை என்றால் என்னவென்றே தெரியவில்லை, அல்லது மருத்துவ அறிவியலை திரித்து இழிவுபடுத்தும் நோக்கத்தோடு அவ்வாறு பேசுகின்றனர் என்றுதான் கூறமுடியும்.

மகாபாரதத்தில் குருச்சேத்திரப் போர் நடைபெற்றபோது அதுகுறித்த விவரங்களை திருதிராஷ்டிரனுக்கு ஞானதிருஷ்டி மூலமாக சஞ்சய் விவரித்ததாக கதையில் கூறப்பட்டுள்ளது. இதை சான்றாகச் சொல்லி அப்போதே இண்டர்நெட் இருந்தது, என்கின்றனர். அப்படி மென்றால் இந்தியாவில் கணினி இருந்தது என்றும் நிரூபிக்க வேண்டும். அதற்கு கணினி அறிவியலுக்கு அடிப்படையான 0, 1 ஆகிய இரண்டு எண்களும் இந்தியாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டது என மக்களை நம்பவைத்துவிட்டால் இதையும் நம்ப வைத்துவிடலாம். எனவேதான் சமீபத்தில் 0 மற்றும் 1 ஆகியவை இந்தியாவில்தான் கண்டு பிடிக்கப்பட்டது என்பதை இந்துத்துவவாதிகள் அதிகமாக பேசிவருகின்றனர். பூஜ்யம் இந்தியாவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அது வேதகாலத்திற்கு நீண்டநாள் கழித்தே கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 1 என்ற எண் இந்தியாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. கிமு 3000 ஆண்டுகள் வாக்கில் எகிப்தியர்கள்தான் 1 என்ற எண்ணை அளப்பதற்குப் பயன்படுத்தினர். அப்படி இருக்கையில் 1 என்ற எண்ணை இந்தியாவில்தான் கண்டுபிடித்ததாக ஏன் கூறவேண்டும்?

இதேபோன்றுதான் 'பசு மாடு மூச்சை வெளியிடும்போது ஆக்சிஜனை வெளியிடுகிறது', 'பசுவின் பாலில் தங்கம் உள்ளது', 'பசுவின் சாணம் கதிரியக்கத்தை தடுக்கும் ஆற்றல் உள்ளது' போன்ற கதைகளைக் கூறுகின்றனர்.

ஏற்கெனவே உலக அளவில் கண்டுபிடிக்கப் பட்ட பல அறிவியல் கண்டுபிடிப்புகளை எல்லாம் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டவை, அவற்றை ஐரோப்பா தனது அறிவு என்று கூறுகிறது என்ற கதையை கட்டவிழ்த்து வருகின்றனர். பெரும் பாலும் இதைத்தான் இந்திய அறிவுமுறை என்று பேசுகின்றனர். இந்த பாடத்தைப் படிப்பதால் மாணவர்களுக்கு ஒரு அறிவும் வளராது, இதனால் வேலைவாய்ப்பும் கிட்டப்போவதில்லை. இது மிகப்பெரிய ஆபத்தை விளைவிக்கும் அபாயம் உள்ளது. இந்திய அறிவியல் முறை என்று மாணவர்களிடம் ஆர்எஸ்எஸ் சங் பரிவார் மத கருத்துக்களை திணிக்கப்பார்க்கின்றனர். உண்மையான அறிவியலை அகற்றுகின்றனர். அதன் ஒரு உதாரணம்தான் டார்வின் பரிணாம கொள்கை பாடத்தையும், தனிம அட்டவனை பாடத்தையும் என்சிஇஆர்டி பாடத்திட்டத்திலிருந்து நீக்கியதாகும்.

### பள்ளிக்கல்வியின் அடித்தளத்தையே அழித்தொழிக்க முற்படும் சில அம்சங்கள்

பள்ளிக் கல்வியில் தற்போது இருக்கும் 10 +2 முறைக்குப் பதிலாக 5+3+3+4 முறை கொண்டு வரப்பட உள்ளது. அதாவது இதுவரை 12 ஆண்டுகளாக இருந்த பள்ளிப் படிப்பு இதன்மூலம் 15 வருடங்களாக அதிகரிக்கப்படுகிறது.

முதல் 5 வருடங்கள், 3 வயது முதல் 8 வயது வரை அடித்தளக் கல்வி வழங்கப்பட உள்ளது, 3ஆம் வயதில் பிரி கேஜி (Pre KG), 4ஆம் வயதில் எல்கேஜி, 5ஆம் வயதில் யுகெஜி, 6ஆம் வயதில் 1ஆம் வகுப்பு, 7ஆம் வயதில் 2ஆம் வகுப்பு என 5 வருட அடித்தளக் கல்வி வழங்கப்படும். தற்போது 5 வயதில் 1ஆம் வகுப்பில் சேர்கிறோம்; இது 6ஆம் வயதாக மாற்றப்படுகிறது.

அடுத்த 3 வருடங்கள் தயாரிப்பு கட்டம், இதில் 3ஆம், 4ஆம், 5ஆம் வகுப்புக்கள் அடங்கும்.

அடுத்த 3 ஆண்டுகள் நடுநிலை கட்டத்தில் 6, 7, 8ஆம் வகுப்புகளை முடிக்க வேண்டும்.

இறுதி 4 ஆண்டுகள் உயர்நிலை கட்டத்தில் 9,10,+1,+2 வகுப்புக்கள் இருக்கும். பள்ளியை விட்டு வெளியேறும்போது மாணவன் வயது 18+ ஆக இருக்கும். தற்போது அது 17 ஆகும்.

### அடித்தளக் கட்ட கல்வியே இண்டெர்நெட் மூலமாம்!

இதில் அடித்தளக் கல்விக்கான முதல் 3 வருடங்கள் படிப்புக்கு தற்போது அரசு நிதி உதவியில் இயங்கும் பள்ளிகளே இல்லை. தற்போது பெரும்பாலான குழந்தைகள் அங்கன் வாடிகள், பால்வாடிகள், தனியார் நடத்தும் முன்பருவ பள்ளிகளில்தான் நேரம் கழிக்கின்றனர் என்று பாடத் திட்ட வரைபடம் ஒப்புக்கொள்கிறது. 'ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தரமான முன்பருவ கல்வியை அளிப்பது என்இபி2020யின் முக்கியமான முன்னுரிமைத் திட்டங்கள்' என்று இந்த ஆவணம் கூறுகிறது. ஆனால் இந்த வயது பிரிவினருக்கு எப்படி உயர்தரக் கல்வியை வழங்கப்போகிறார்கள், அதற்கான நிதியை யார் வழங்குவார்கள் என்பது குறித்து இந்த ஆவணம் வாய்திறக்கவே இல்லை. முதன்முதலில் பள்ளிக்கு வரும் பச்சிளம் குழந்தைகளுக்கு தேவையான குறைந்தபட்ச கல்வியேனும் அவர்களால் வழங்க என்ன திட்டமிருக்கிறது என்பதை விளக்கவில்லை. அப்படி இருக்கையில் கொள்கையில் குறிப் பிட்டுள்ளபடி 'பன்முக, பன்னடுக்கு, விளையாட்டு அடிப்படையிலான, செயல்வழி, கேள்விகேட்கும் திறனடிப்படையிலான' கல்வியை அவர்களால் எப்படி வழங்கமுடியுமா? அங்கன்வாடி ஊழியர்கள் / உதவியாளர்களுக்கு அவரவர் படிப்பிற்கேற்றவாறு இணையவழியாகவோ அல்லது தொலைக்காட்சியில் நேரடியாகவே டேரெக்ட் டு ஹோம் (டிடிஹெச்) மூலமோ ஓராண்டோ அல்லது ஆறு மாதமோ ஆன்லைன் பயிற்சி அளிக்கப்படுமாம். இதன்மூலம் ஊரக பகுதிகளில் உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் விளையாட்டு அடிப்படையிலான, செயல்வழி கல்வி முறையில் குழந்தைகளுக்கு பயிற்றுவிக்கும் பயிற்சியைப் பெற்றுவிடுவார்களாம்.

ஏற்கெனவே தனியார் விளையாட்டு பள்ளிகள், மிக உயர்கட்டண மான்டெசோரி (Montessory) பள்ளிகள், தனியார் பள்ளிகள் எல்கேஜி, யுகேஜி படிப்புகள் போன்றவற்றை பல ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். அவற்றிற்கு சில பத்தாயிரங்கள் முதல் லட்சங்கள் வரை கட்டணம் வசூலிக்கின்றனர். எனவே சாமானிய ஏழை எளிய மக்கள் தங்கள் பிள்ளைகளை அங்கே அனுப்பாமல் வீட்டில் வைத்துக் கொள்கிறார்கள் அல்லது, வேலைக்குச் செல்லும் பெற்றோர் அங்கன்வாடிகளுக்கு அனுப்பி வருகின்றனர். தற்போது 3 வயதிலேயே இது கட்டாயமென்று ஆக்கப்படுவதால் தனியார் பள்ளிகளுக்கு அனுப்பமுடியாத சாமானிய ஏழை எளிய மக்கள் பிள்ளைகளை அங்கன்வாடிகளிலேயே படிக்க அனுப்ப வேண்டும், அல்லது அங்கும் படிப்பு எதுவும் கிடைக்காது என்ற சூழல் உருவாவதால் அவர்களும் தங்கள் குழந்தைகளை தனியார் பள்ளிகளை நோக்கி அனுப்ப நிர்ப்பந்திக்கப் படுவர். இதனால் படிப்படியாக அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மேலும் குறையும். அதை சாக்காக வைத்து அரசு பள்ளிகளையும், அங்கன்வாடிகளையும் மூடுவதற்கான திட்டமாக இது அமையும். இது முன்பருவ கல்வி முதல், கல்வியை முற்றிலும் தனியார்மயமாக்குவதற்கான திட்டமே ஆகும்.

### தயாரிப்பு நிலைக் கட்டத்தில் கற்றலையே சிதைக்கும் முயற்சி

3 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான 3 ஆண்டுகள், இதனை தயாரிப்புக் கட்டம் என்று கூறியுள்ளனர். அங்கே குறைந்த புத்தகங்களுடன் பெரும்பாலும் 'விளையாட்டு, கண்டுபிடிப்பு, செயல்வழி அடிப்படையிலான பாடத்திட்டமும் கற்பிக்கும் பாணியும்' இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இங்கும் தேர்வு இருக்குமா, பாஸ் பெயில் முறை இருக்குமா அல்லது கற்றலை உறுதி செய்யாத தற்போதைய 'ஆல் பாஸ்' முறையே இருக்குமா என்பது கூறப்படவில்லை.

பாடப்புத்தகங்கள் அடிப்படையிலான கற்பித்தலே இடைநிலை கட்டம் என்ற 6 முதல் 8ஆம் வகுப்பிலிருந்துதான் தொடங்குகிறது. இதில் முறையான தனித்த மதிப்பீடுகள் நடைபெறும் என்று கூறப்பட்டாலும் அங்கும் பாஸ் பெயில் முறை இருக்குமா என்பது பற்றி குறிப்பிடப்பட வில்லை. ஆனால் இந்த கட்டத்திலிருந்து தொழிற்கல்வி வலியுறுத்தப் பட்டுள்ளது.

### உயர்நிலை கட்ட பள்ளிக் கல்வி

முதல் மூன்று கட்டங்கள் இப்படி என்றால் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை என உயர்நிலை கட்டம் மேலும் பேரழிவாக இருக்கிறது. 10 வகுப்பு முடித்தபிறகு மாணவர்கள் வெளியேறிக் கொள்ளலாம், சிறிது காலம் கழித்து 11ஆம் வகுப்பில் மீண்டும் சேர்ந்துகொள்ளலாம். ஆனால் 10 வகுப்பின் இறுதியில் தற்போது இருப்பதுபோல் உயர்நிலை பொதுத்தேர்வு இருக்குமா, அதில் தேர்ச்சிபெற்றால் சான்றிதழ் இருக்குமா என்பது குறித்து ஆவணம் கள்ள மௌனம் காக்கிறது.

தற்போது பல அரசு மற்றும் அரசு சாரா வேலைகளுக்கான குறைந்தபட்ச கல்வித்தகுதியாக 10ஆம் வகுப்பு உள்ளது. டிரைவிங் லைசென்ஸ் எடுப்பதற்கு கூட தற்போது 10ஆம் வகுப்பு கட்டாயம். அப்படி இருக்கையில் 10ஆம் வகுப்பில் இது போன்று எந்தத் தேர்வும் நடக்கவில்லை என்றால் மாணவன் படிப்பறிவு இன்றியே சான்றிதழ் பெற்றவன் ஆவான். அது பின்னாளில் அவர்களது வேலைவாய்ப்பிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

+1, +2 வகுப்புகளில் செமஸ்டர் முறையை புகுத்துகின்றனர். அதில் பாடங்களை அறிவியல், கணிணி, பொருளாதாரம் கலை என எல்லாம் கலந்த ஒன்றாக விருப்ப அடிப்படையில் தேர்ந்தெடுக்கலாம் என்று கூறுகின்றனர். தற்போது உள்ளது போல் எதிர்காலத்தில் எதை கல்லூரியில் படிக்க விரும்புகிறாரோ அதற்குரிய பாடப் பிரிவுகளாக இனி இருக்காது! ஒருவர் இயற்பியல், இசை, தத்துவம், இந்திய அறிவு முறை என்ற கலவையைப் படித்தால் இவற்றில் எந்தப்பாடத் திலாவது ஆழமான அறிவைப் பெறமுடியுமா? இப்படி, தொடர்பில்லாத பாடங்களை ஒருவர் பயின்றால் ஒரு துறை சார்ந்த முழுமையான அறிவை ஒருவரால் வளர்த்தெடுக்க முடியாது. அதேசமயம் தனியார் பள்ளிகள், தொடர்புடைய பாடங்கள் அடங்கிய குரூப்களை நடத்தி மாணவர் சேர்க்கையை உத்திரவாதப்படுத்திவிடுவர். இதனால் எப்படியாவது நன்கு படிக்கவேண்டு மென்று விரும்புவோர் அரசு பள்ளிகளை விட்டு வெளியேறி தனியார் பள்ளிகளுக்கு ஓடும் நிலை

தொடர்ச்சி 3ம் பக்கம்

## பள்ளிக்கல்வியை பின்னோக்கித் தள்ளும் . . .

# நாட்டில் மதச்சார்பற்ற, அறிவியல்பூர்வ, ஜனநாயகபூர்வ கல்வியை அனைவருக்கும் இலவசமாக வழங்கவேண்டுமென விடுதலைப் போராட்டத் தலைவர்கள் விரும்பினர்

2ம் பக்கத் தொடர்ச்சி

துரிதமாகும். அதேபோல், தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற, ஆழ்ந்த அறிவு கிடைக்கும் எனக் கருதி, பயிற்சி மையங்களில் அதிகம் செலவழித்து படிக்க வாய்ப்புள்ள பிள்ளைகள் மட்டுமே உயர் மற்றும் தொழிற்கல்வியில் சேரும் வாய்ப்பைப் பெறுவர். ஒருபுறம் உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை வீதத்தை அதிகப்படுத்துவோம் என்று கூறிக்கொண்டு சாமானிய மக்கள் உயர்கல்விக்கு செல்லும் வாய்ப்பையே சுருக்குகின்றனர்.

### அறிவுத் திறனுக்குப் பதிலாக வேலைத் திறனை வழங்க சதித்திட்டம்

சொல்லப்போனால், என்இபி2020யின் முக்கியமான அழுத்தமே ஒட்டுமொத்த கல்வியையும் தொழில்மயமாக்குவதுதான். முதல் இரண்டு கட்டங்களில் விளையாட்டு அல்லது செயல்வழி அடிப்படையிலான கல்வி என்று சொல்வதே வெறுமனே வேலை செய்வதற்கான திறனை வளர்ப்பதற்காகத்தான். பள்ளிப் பாடத்திட்ட வரைபட ஆவணம் கூறுகிறது: அடித்தள மற்றும் தயாரிப்பு கட்டங்களில் விளையாட்டு, இன்னும் இதர செயல்பாடுகள் மூலமாக பல திறமைகள் வளர்க்கப்படும், இவை பின்னர் தொழில்படிப்பிற்கு உதவும். இந்த திறன்கள் வேலைசெய்வதற்கு தயாரிப்பு திறன்கள் என்று அழைக்கப்படும். இடைநிலை கட்டத்தில் பரந்த வேலை தொடர்பான வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழங்கப்படும். இது அவர்களது உயர்நிலை கட்டத்தில் அவர்களது விருப்பத்திற்கேற்ற வேலைக்கான திறனை அடைவதற்கு உகந்தவர்களாக ஆக்கும், இது சம்பாதிப்பதற்கான வேலை கிடைப்பதற்கு அவர்களுக்கு உதவும். எந்த மாதிரியான வேலைகள்? மாணவர்கள் 'கோழிப்பண்ணை, பால்பண்ணை, உள்ளூர் ஒர்க்ஷாப்புகள், தச்சு வேலை செய்யுமிடங்கள், தையல் யூனிட்டுகள், ஓட்டல்கள், மருத்துவமனைகள், உடற்பயிற்சி மையங்கள், முதியோர் இல்லங்கள், அழகு நிலையங்கள்' போன்றவற்றில் தங்களுக்குத் தேவையான இடங்களுக்கு மாணவர்கள் செல்வர் என்று கூறப்பட்டுள்ளது.

மாணவர்களின் கூர்மையான சிந்தனைத் திறனை வளர்ப்பதற்கு செயல்வழி கற்றலுக்கு ஊக்கமளிக்குமாறு சிபிஎஸ்இ பள்ளி முதல்வர்களுக்கு சிபிஎஸ்இ இயக்குநர் ஏற்கெனவே ஜெனரல் ஆலோசனை வழங்கியுள்ளார். அதாவது முதன்முதலில் பாடப்புத்தகங்களை வைத்து படிக்கத்தொடங்கும்போது மாணவர்கள் தங்கள் பள்ளிநேரத்தின் பெரும்பாலான நேரத்தை கோழிப்பண்ணை, பால்பண்ணை, ஓட்டல், அழகுநிலையங்களில் செலவழித்து தங்கள் எதிர்கால வேலைவாய்ப்பிற்கான தகுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும், நுட்பமான மனோதிடத்தை வளர்த்துக்கொள்ள வேண்டுமாம். அதாவது படித்து முடித்தபிறகு இனி வேலையைத் தேட வேண்டியதில்லை மாறாக தாங்களே சொந்தமாக உருவாக்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தை ஆழமாக மக்கள் மனதில் பதியவைப்பதே இந்த கல்விக் கொள்கை வகுப்பாளர்களின் நோக்கமாகும். மொத்தத்தில் இது அடிப்படைக் கல்வி மறுப்பு அதே நேரத்தில் அரசாங்கத்திடம் வேலை கேட்கும் உரிமையும் மறுப்பு ஆகும்.

### கல்விக் கொள்கையை அமல்படுத்த நிதி ஒதுக்கப்போவது யார்?

என்இபி2020ல் பள்ளிக்கல்விக்கு புதிய கட்டமைப்பை உருவாக்க எத்தனிக்கின்றனர். ஆனால் அதற்கான நிதி எங்கிருந்து வரும்? தேசிய அளவில் இதுவரை அமைக்கப்பட்ட கல்வி ஆணையங்கள் எல்லாமே மத்திய பட்ஜெட்டில் 10 விழுக்காடு நிதி ஒதுக்கவேண்டும் என்று கூறினாலும் நிதியை உயர்த்துவதற்கு மாறாக தொடர்ந்து குறைத்து வருகின்றனர். இதற்கு முன்பு 2009–14 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் 4.6% நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போது பாஜக ஆட்சியில் 2023–24 நிதி ஆண்டில் 2.5% ஆக குறைக்கப் பட்டுள்ளது. இந்த கொள்கையில் கூறப்பட்டி ருப்பதுபோல் குறைந்தபட்சம் பள்ளி முன்பருவ கல்விக்கு பிள்ளைகளை கொண்டுவர வேண்டுமானால் அதற்கான கூடுதல் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். ஆனால் அவற்றிற்கு நிதி ஒதுக்குவது குறித்து எதுவுமே பேசவில்லை. செலவு அதிகம் பிடிக்கும் பால்வாடிகா போன்ற காவிமயக் கல்வியை கற்றுக்கொடுக்கும், தனியார் கல்விநிறுவனங் களுக்குள் பிள்ளைகளைத் தள்ள எத்தனிக் கின்றனர். இதுவும் பள்ளிக்கல்வி முழுவதையும் தனியார்மயம் சரக்குமயமாக்குவதை தீவிரப்படுத்து வதற்கு ஏதுவாக நடக்கிறது.

சுருக்கமாக, பள்ளிப் பாடத்திட்ட வரைபட இரண்டு பகுதி ஆவணத் தொகுப்பை அமுலாக்கினால், 1) பள்ளி படிப்பு ஆண்டுகள் 3 வருடங்கள் அதிகரிக்கும்.

2) கல்விக்கான மக்கள் செய்யும் செலவு அதிகரிக்கும்.

3) பள்ளி இடைநிற்றல் அதிகரிக்கும்.

4) பிஞ்சு வயது முதலே அறிவியலுக்குப் புறம்பான, வரலாற்றுக்குப் புறம்பான, பகுத்தறிவற்ற கருத்துக்களின் அடிப்படையிலான காவிமயமாக்கப்பட்ட கல்விக்கு பலியாவர்.

5) 3 வருட முன்பருவ பள்ளிக் கல்விக்காக மேலும் மான்டெசோரி மாதிரியான தனியார் பள்ளிகள் புற்றீசல்கள் போல் பெருகும்.

6) கல்வியில் கற்றுத் தேர்வதில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ள தடையில்லாத் தேர்ச்சி முறையை கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வியை நேசிப்பவர்கள் கடுமையாக எதிர்த்தபோதிலும், இதன் பாதிப்புகளை பாராளுமன்ற நிலைக்குழுவே ஒப்புக்கொண்ட பின்பும் பாஸ்பெயில் முறையை மீண்டும் கொண்டுவருவது பற்றி இந்த கொள்கை பேசவே இல்லை. பாஸ்பெயில் முறை இல்லையென்றால் அது பள்ளிக்கல்வியில் தொடர்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

7) பல்துறை கலவைக் கல்வியுடன் விருப்பத் தேர்வு அடிப்படையிலான மதிப்பெண் முறையிலான செமஸ்டர் முறை முழுமையான அறிவைப் பெறுவதற்கு பெருந்தடையாகிவிடும்.

8) கல்வி முழுவதையும் தொழில்மயமாக்கும் முயற்சி மனிதனை மனிதனாக்குவதற்கு மாறாக அடிப்படைக் கல்வி உரிமையை மறுத்து வெறும் வேலைசெய்யத் தகுதியுடைய எந்திரமாக மாற்றும், அதே நேரம் வேலை வாய்ப்பை வழங்க வேண்டிய அரசாங்கத்தின் பொறுப்பும் தட்டிக்கழிக்கப்படுகிறது.

9) இந்திய அறிவியல் முறை என்ற பெயரில் மாயவாதம், இட்டுக்கட்டிய பொய்கள், பிறரது சாதனைகளை நமது சாதனைகள் என்று பேசுதல், உண்மையான அறிவியல் கண்டுபிடிப்புகளை நீக்குதல் போன்றவற்றால் உண்மையான அறிவியல்பூர்வ மனப்பான்மையை மாணவர் களிடம் வளர்ப்பதற்கு மாறாக குருட்டுத்தனத்தை வளர்த்துவிடும்.

10) கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை தொடர்ந்து குறைப்பதால் அரசு பள்ளிகள் மூடப்படும். ஆரம்ப கல்வி முதலே தனியார் பள்ளிகளில் அதிக தொகை செலவழிக்க வேண்டும் அல்லது கல்வியையே இழக்க வேண்டும் என்ற நிலைக்கு சாமானிய மக்கள் தள்ளப்படுவர்.

நமது நாட்டின் மாபெரும் மறுமலர்ச்சிக் காலகட்டத் தலைவர்கள், விடுதலைப் போராட்டத் தலைவர்கள் நாட்டில் மதச்சார்பற்ற, அறிவியல் பூர்வ, ஜனநாயகபூர்வ கல்வியை அனைவருக்கும் இலவசமாக வழங்கவேண்டும் என்று விரும்பினர். ஆனால் அவர்களது விருப்பங்களுக்கு துரோக மிழைக்கும் வகையில் கல்வியின் மீதும் மனிதகுலத்தின் மீதும் ஆர்எஸ்எஸ், பாஜக சங் பரிவார் அவர்களது ஏகபோக முதலாளித்துவ எஜமானர்களின் விருப்பத்தின்பேரில் கல்வியின் மீது தொடுத்துள்ள கொடிய தாக்குதலுக்கு எதிராக அனைத்துத் தரப்பு மக்களும் வெகுண்டெழுந்து போராட முன்வரவேண்டும் ■

# புதுக்கோட்டை மாவட்டம் மீமிசலில் வறட்சி நிவாரணம் கேட்டு தர்ணா

கடந்த 2022ஆம் ஆண்டில் பருவமழை பொய்த்து, ஆவுடையார் கோயில் மற்றும் மணமேல்குடி தாலுக்கா கிராமங்களில் குறிப்பாக மீமிசல் பிர்கா மற்றும் கோட்டைப்பட்டினம் பிர்கா கிராம பகுதிகளில் விவசாயம் செய்த நிலங்கள் வற்றி, காய்ந்து, வறண்டு போய் விளைந்தும்



ஆவுடையார் கோவில் தாலுகா ஏஐகேகேஎம்எஸ் செயலாளர் தோழர் கோவிந்தராசு தலைமையில் நடந்த தர்ணா போராட்டத்தில் மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர் உரை

விளையாத பயிர்களை ஆடு மாடுகள் விட்டு மேயவிடம் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். நமது விவசாய அமைப்பான அகில இந்திய விவசாயிகள் விவசாய தொழிலாளர் சங்கம் (ஏஐகேகேஎம்எஸ்–AIKKMS) சார்பில் கடந்த ஆண்டு டிசம்பர் மாத வாக்கில் தமிழக முதலமைச்சர், மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு உரிய வறட்சி நிவாரணம் அறிவிக்கக் கோரியும் பயிர் காப்பீட்டு தொகை வழங்க கோரியும் விவசாய கடன்களை ரத்து செய்யக் கோரியும் மனுக்கள் அனுப்பப்பட்டன. அவை பலன் ஏதும் அளிக்காத சூழலில் முதல் கட்டப் போராட்டமாக செய்யாணம் மற்றும் மீமிசல் குடியிருப்பு பகுதிகளில் ஏஐகேகேஎம்எஸ் தலைமையில் கிராமக் கூட்டங்களும் அதனைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 8 கிராமங்களில் ஆட்டோ வாகன பிரச்சாரமும் செய்யப்பட்டது. அதன் பின்னணியில் வருவாய்த்துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நிலங்களை நேரடியாக ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்கப் போவதாக வாக்குறுதி தந்துவிட்டும் சென்றனர்.

ஆனால் ஆறு மாதங்கள் கடந்த பின்னரும் இப்பகுதி விவசாயிகளுக்கு உரிய நிவாரணம், பயிர் காப்பீட்டு தொகை என எதுவும் கிடைக்க வில்லை. இந்நிலையில்தான் கடந்த 21.5.2023 அன்று மீமிசல் கடை வீதியில் விவசாயிகள் ஏஐகேகேஎம்எஸ் தலைமையில் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அதன் பின்னர் விவசாயிகளின் கோரிக்கைகளை நினைவூட்டும் முகமாக மாவட்ட ஆட்சியருக்கும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும் கோரிக்கைகளை வலியுறுத்தி மீண்டும் ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்கள் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற இன்னும் தாமதிப்பார்களேயானால் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் வகையில் அடுத்த கட்ட போராட்டத்தை நடத்த இருப்பதாக விவசாயிகள் உறுதி கொண்டிருக்கின்றனர் ■

# வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு தடை!

தேசிய மருத்துவ ஆணையம் (National Meidcal Commission) இவ்வாண்டு மார்ச் மாதம் செய்த திடீர் ஆய்வுகளின் அடிப்படையில் நாடு முழுவதும் பல மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு தடை விதித்துள்ளது. இது ஆயிரக் கணக்கான மாணவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி யுள்ளது. தமிழகத்தில் பிரசித்தி பெற்ற மருத்துவக் கல்லூரிகளான சென்னையில் ஸ்டான்லி, திருச்சியில் கிஆபெ விசுவநாதன் அரசினர் கல்லூரி, தருமபுரியில் அரசினர் கல்லூரி, புதுவையில் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம், அஸ்ஸாமில் புகழ் பெற்ற குவஹாத்தி மருத்துவக் கல்லூரி, அஸ்ஸாம் அரசு மருத்துவக் கல்லூரி என பல மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதே போல தனியார் கல்லூரிகள் உட்பட நாடு முழுவதும் 38 மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு தடை விதித்துள்ளது. மருத்துவ ஒழுங்குமுறை விதிகள் கடைபிடிக்கப்படவில்லை என்ற காரணம் கூறப்படுகிறது. சிசிடிவி கேமெரா இல்லை, ஆதார் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு முறை வேலை செய்யவில்லை போன்ற சில்லரை குறைகளைக் காரணம் காட்டி சேர்க்கையை ரத்து செய்துள்ளதாக கூறப்படுகின்றது. ஆணையத்தின் ஒழுங்குமுறை விதியின் படி, ஆதார் இணைத்த வருகைப் பதிவேடு அமைப்பு (AEBAS), மருத்துவ நிர்வாக தகவல் அமைப்பு (HMIS), சிசிடிவி ஆகியவை தேசிய மருத்துவ ஆணையத்தின் மத்திய கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்கள் மாணவர்கள் நிர்வாகிகள் வருகை ஆணையத்திற்கு தெரிந்துவிடும். இவை சரியாக செயல்படவில்லை என காரணம் காட்டி கல்லூரிகளில் சேர்க்கையை ரத்து செய்துள்ளது ஆணையம். மேலும் சுமார் 100 கல்லூரிகளுக்கு சேர்க்கை ரத்து செய்யலாம் என செய்திகள் வருகின்றன. இந்த மின்னணு பதிவேடுகள் எல்லாம் இன்றி நூறாண்டுகளுக்கும் மேலாக மருத்துவக் கல்லூரிகள் சிறப்பாக இயங்க வில்லையா, அல்லது இவற்றின் பின்னால் வேறு திரை மறைவு காரணங்கள் உள்ளனவா, போன்ற கேள்விகளும் மக்கள் மனதில் எழுகின்றன.

திருச்சி மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கான, ஜூன் 9 அன்று நடக்க இருந்த பட்டமளிப்பு விழா இதனால் நின்றுவிட்டது. இளங்கலை ஆவணங் களின்றி முதுகலை மருத்துவப் படிப்பிற்கு இவ்வாண்டு விண்ணப்பிக்க இயலாது என மாணவர்கள் தவிக்கின்றனர். முக்கியமாக, பள்ளிப் படிப்பை முடித்து நீட் தேர்வு எழுதி சேர்க்கைக்காக காத்திருக்கும் இவ்வேளையில் மாணவர்களையும் பெற்றோர்களையும் இந்த நடவடிக்கை மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளது. இவ்வருடம் மாணவர் சேர்க்கை இல்லை என்றால் இன்டன்ஷிப் மருத்துவர்கள் குறைந்து நோயாளிகள் பாதிக்கப்படுவர். கல்லூரிகள் குறைகளை சரிசெய்து அங்கீகாரம் பெற இரண்டு மாத அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படியும் நிலைமை சீராகவில்லை என்றால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தகுதி இருந்தும் சேர முடியாமல் பாதிக்கப்படுவர். குறைகள் யாரிடமோ இருக்க மாணவர்கள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்?

ஒழுங்குமுறைவிதிகள் கட்டாயமாக்கப்படுவது கல்லூரிகளின் தரத்தை உறுதி செய்ய உதவும் என்றாலும் அதை மாணவர்கள், கல்லூரி மருத்துவமனை நோயாளிகள் என மக்களைப் பாதிக்கா வண்ணம் நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிமீது எடுத்த நடவடிக்கை முட்டாள்தனமானது என ஃபெடரேசன் ஆஃப் ஆல் இந்தியா மெடிகல் அசோசியேசன் தலைவர் டாக்டர் ரோஷன் கிருஷ்ணன் கருத்து தெரிவித் துள்ளார். அவர் மேலும் கூறுகிறார்: 'தனியார் கல்லூரிகளுக்கு விதிகள் இலகுவாக உள்ளன, அரசு கல்லூரிகளுக்கு அவை கண்டிப்புடன் திணிக்கப்படுகின்றன. எப்படி, ஆய்வாளர்கள் வருவதை முன்கூட்டியே தனியார் கல்லூரிகள் அறிந்து விழித்துக்கொள்கிறார்கள், அரசுக் கல்லூரிகளுக்கு அவர்கள் வருகை திடீர் வருகையாக இருக்கின்றது? எங்கோ ஊழல் நடப்பதை இது கோடிட்டுக் காட்டவில்லையா?'

ஆதார் கட்டாயமில்லை என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பளித்திருக்கிறது, ஆதாருடன் வருகைப் பதிவேடு மின்னணு முறையில் இணைப்பது கட்டாயம் என்றால் அது அத் தீர்ப்பை மீறுவதாகாதா? நாட்டில் இருக்கும் சுமார் 600 கல்லூரிகளின் பல்வேறு தரவுகளையும் கையாளும் மிகப் பெரிய மின்னணு கட்டமைப்பை ஆணையம் மட்டும் மிகச் சரியாக குறைபாடின்றி கொண்டுள்ளதா எனவும் கேள்வி எழுகிறது.

இந்த சில்லரைப் பிரச்சினைகளைவிட முக்கியமான பிரச்சினைகளான அடிப்படை உட்கட்டமைப்பு போதாமை, ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைவு போன்ற முக்கியக் குறைபாடுகளை பல தனியார் கல்லூரிகள் கொண்டிருந்தபோதும் அவற்றிற்காக நடவடிக் கையை ஆணையம் எடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக, அரசு கல்லூரிகளின்மீது சேர்க்கை ரத்து செய்தால் மாணவர்கள் வழியின்றி அத்தகைய தனியார் கல்லூரிகளை நோக்கி ஓடுவார்கள் என்பதை ஆணையம் அறியாதா என்ன.

தமிழக சுகாதார அமைச்சர் நிலைமை சரியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இதைப் பெரிதாக்க வேண்டாம் என அறிக்கை விடுத்துள்ளார். சில்லரைக் குறைகள் சரியாகி சேர்க்கை நடந்தாலும்கூட, மாணவர்களும் பொதுமக்களும் சுட்டிக்காட்டி வரும், உண்மையில் நிலவும் பல்வேறு குறைபாடுகளைப் பற்றி மத்திய ஆணையமோ, தமிழக அரசாங்கமோ ஏன் வாயைத் திறப்பத்தில்லை?

வேறு கோணத்திலிருந்து பார்த்தால், பயோமெட்ரிக் இணைப்பின் மூலம் ஆசிரியர்கள் வருகையை ஆணையம் அறிந்து கொள்கிறது. வருகைப் பதிவேட்டின் தரவுகளில் சுமார் 40% வருகை இல்லை. ஒன்று, ஆசிரியர்கள் வரவில்லை, அல்லது ஆசிரியர் இடங்கள் நிரப்பப் படவில்லை. நிரப்பும் கடமையை செய்யாத கல்லூரி நிர்வாகங்கள், யந்திரக் கோளாறுகளை காரணம் காட்டக் கூடும். குறிப்பாக, ஆதார் இணைப்பு இருந்தால், யாரை பணியமர்த்தினார்கள் என்ற தவலும், அதாவது உண்மையிலேயே ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள் என்பதும் தெரிய வரும். ஆசிரியர்களை பணியமர்த்தாமல் கல்லூரிகளை தனியார் நிர்வாகங்கள் ஏமாற்றுவதும் அதை வைத்து அவர்களிடம் பேரம் பேசவும் வாய்ப்புள்ளது. அதே சமயம், ஆய்வு செய்ய வரும்போது முன்கூட்டியே அறிந்து கொண்டு தனியார் முதலாளிகள் தற்காலிகமாக சிலரை பணியமர்த்தி ஆய்வாளர்களை திருப்தி செய்துவிடலாம்.

தமிழகத்தில் 39 அரசு கல்லூரிகள் உட்பட 71 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அரசு மருத்துவக் கல்லூரிகளில் சுமார் 1600 பேராசிரியர்கள் அத்தியாவசியமாக இருக்க வேண்டும். இதில் சுமார் 450 பதவிகள் இன்னமும் இரண்டாண்டு களாக நிரப்பப் படவில்லை. உதவிப் பேராசிரியர்கள் சுமார் 1600இல் சுமார் 550 இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இந்த விவரம், வருகைப் பதிவேடு மூலம் தேசிய மருத்துவ ஆணையம் அறிந்து கொண்டுவிடும். ஆக, கேள்வி, பயோமெட்ரிக் யந்திரம் இல்லை என்பதல்ல, மாறாக ஏன் போதிய ஆசிரியர்களை நிரப்பவில்லை என்பதுதான். இப்படி நேரடியாகக் கேட்க ஒருவேளைஆணையத்திற்கு துணிவில்லை. அதேசமயம் இந்த உண்மையான காரணத்தை தமிழக திமுக அரசாங்கம் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. இடங்களை நிரப்புவதிலும், உதவிப் பேராசிரியர்களை பதவி உயர்வு கொடுப்பத்திலும் லஞ்சம் விளையாடுகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அதனால்தான் மாநில அரசாங்கம் இப்பிரச்சினையை அடக்கி வாசிக்கிறது.

ஒருசில சில்லரைப் பிரச்சினைகளை சரி செய்துவிட்டதாகக் காட்டி மாணவர் சேர்க்கையை அனேகமாக இக்கல்லூரிகள் நடத்திவிடலாம். ஆனால், மாணவர்களுக்கு மருத்துவ உட் கட்டமைப்புகள், ஆசிரியர்கள், நோயாளிகளுக்கு போதிய புற நோயாளி பிரிவுகள், மருத்துவமனை சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள், மக்களுக்கு இலவச மருத்துவ சேவைகளுக்கன மருந்துகள், உபகரணங்கள் போன்றவற்றை எல்லாம் குறைந்தபட்ச எண்ணிக்கையிலும் தரத்திலும் இருக்கின்றனவா என ஆணையமும் அரசாங்கமும் உறுதி செய்ய வேண்டும். இதுவே மக்களின் உண்மையான கோரிக்கையாகும் ■

## கர்நாடகா தேர்தல் முடிவு: பாஜக மீதான. . .

1ம் பக்கத் தொடர்ச்சி

கோரிக்கைகளை கிஞ்சித்தும் ஏரெடுத்துப் பாக்கவில்லை. போலி தேசியவாதம், அப்பட்டமான வகுப்புவாதத்தில் தஞ்சம் புகுந்தது. தங்கள் 'தேர்தல் வெற்றி முகம்' எனும் பிரதமரின் பிம்பத்தை முன்னிறுத்தியது. இத்தகைய செயற்பாடு இன்னும் சொல்லப் போனால் இவையெல்லாவற்றின் காரணமாகவே கர்நாடக மக்கள் அவர்களுக்கு ஒரு அவமானகரமான தோல்வியைத் தந்துள்ளனர். மிகப்பெரும் அரசியல் ஜாம்பவான்களாக திரு மோடி, அமித் ஷா, நட்டாவை முன்னிறுத்தியபோதும் அவர்கள் தோல்வியை சந்தித்துள்ளனர் என்பது மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

பாஜக தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், தற்போது ஆட்சிக்கு வந்துள்ள கட்சியானது மக்கள்விரோத கொள்கைகள் எதுவும் எடுக்காவண்ணம் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். வாழ்வின் எரியும் பிரச்சினைகளுக்கெதிராகவும் புதிய அரசாங்கம் எவ்வித மக்கள் விரோத கொள்கை களையும் எடுக்காதிருக்க வெகுஜன இயக்கங்களை கட்டவேண்டுமென பொதுமக்களுக்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம் ■

ஆகஸ்ட் 5, 2023 பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும், தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான

**சிப்தாஸ் கோஷ்** பிறந்த நூற்றாண்டு நிறைவு

தலைமை தோழர் **கே ராதாகிருஷ்ணா**, பொலிட்பீரோ உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

சிறப்புரை தோழர் **பிரவாஸ் கோஷ்**, பொதுச்செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

காலை 11 மணி, பிரிகேட் பேரேட் மைதானம், கொல்கத்தா

## பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தையும் அறநெறியையும் . . .

# ஒழுக்க நெறி அறநெறி விழுமியங்களின் பலத்தை கொண்டுதான் அனைத்து விதமான சரண்டலுக்கு எதிராக வீரத்துடன் போராட முடியும்

1ம் பக்கத் தொடர்ச்சி

எதிர்கொண்டு, அரை பட்டினியாகவும் அரை குறை ஆடை உடுத்திக்கொண்டும் இருக்கின்ற தேசம் கூட நிமிர்ந்து நின்று, சண்டையிட்டு, போராடுவதற்கான சக்தியைப் பெறும்; அத் தேசத்தின் மக்கள் தலையை நிமிர்த்தி எழுந்து நின்று தன்னைத் தானே அணி திரட்டிக் கொண்டு போராட முடியும் என்பதை என்னால் வலியுறுத்த முடியும். வியட்நாமை பாருங்கள். சீனப் புரட்சியின் வரலாற்றைப் படியுங்கள். புரட்சிக்கு முந்தைய சீன மக்கள் எந்த அளவிற்கு கடுமையான பொருளாதார கஷ்டங்களையும் சுரண்டலையும் அடக்குமுறையையும் எதிர் கொண்டார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். அப்படியும் இந்நாடுகளில் பொதுமக்களும் ஒருங்கு திரட்டப்பட்ட மக்கள் சக்தியும் பொங்கி எழ முடிந்தது. ...காரணம், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் அவர்கள் கொண்டிருந்தனர் இப்போதும் கொண்டிருக்கின்றனர் அதுதான் ஒழுக்க நெறி அறநெறி விழுமியங்கள் ஆகும். இந்த பலத்தின் மீதுதான் அவர்கள் எழுந்து நின்று அனைத்து விதமான சுரண்டலுக்கு எதிராகவும் அடக்க முடியாத வீரத்துடன் போராடினார்கள். தேசத்தின் இந்த ஒழுக்க பண்பை முற்றிலும் ஒழிப்பதற்கு தான் இந்திய ஆளும் வர்க்கம் சதி செய்து வருகிறது.

ஆகவே, நீங்கள் இப்போது காண்கின்ற கலாச்சார ஒழுக்க சீரழிவு, ஏதோ விபத்து அல்ல. ...இதற்குப் பின்னால், ஆளும் வர்க்கத்தின் நன்கு கணக்கிடப்பட்ட நகர்வுகளும் உறுதியான ஆதரவும் இருப்பதை உங்களால் பார்க்க முடியும். மக்களை நல்லவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருக்குமாறு அவர்கள் மேடைப் பிரசங்கங்களில் முழங்குகின்றனர். ஆனால் குறுகிய குறுங்குழுவாத கட்சி நலனுக்காகவும் யதார்த்த அரசியல் அல்லது நடைமுறை அரசியல் என்ற பெயரிலும் மனிதனுள் அவர்கள் மிருக உணர்வுகளை தூண்டி விடுகிறார்கள். ஆளும் கட்சி மட்டும் இதை செய்யவில்லை. போலி புரட்சிகர கட்சிகளும்கூட இவ்வாறு செய்கின்றன. போர்க்குணம் என்ற பெயரிலும் வர்க்கப் போராட்டம் என்ற பெயரிலும், விமரிசனம் செய்யும் தனிநபரை கும்பலாக சேர்ந்து தாக்குவது போன்ற, கோழைத் தனமான வன்முறையை அவர்கள் கட்டவிழ்த்து விடுவதோடு சித்தாந்த போராட்டத்தையும் கருத்துப் பரிமாற்றத்தையும் சிறிதும் சகித்துக் கொள்வ தில்லை. மனிதனை மனிதத்தன்மையற்றவனாக ஆக்கி அவனுள் இருக்கும் வலிமையையும் சுயமரியாதையையும் அழிக்கின்ற விஷயங்களான பேராசை, பணத்தாசை, சிறுமதி ஆகியன தற்போது ஊக்குவிக்கப்படுகின்றன. வழக்கமான கட்சிப் பணிகள் அல்லது தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கும்கூட தற்போது கட்சித் தொண்டர்களை அரசியல் கட்சிகள் காசுக்கு பணி அமர்த்துகின்றனர். இவை அனைத்தும் நடைமுறை சார்ந்த (Practical) அரசியல் என்ற பெயரில் நடக்கின்றன. ஒட்டுமொத்த நாடும் கோடானுகோடி வேலையற்றவர்களால் நிரம்பி வழிகிறது. தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்வதற்கு வழியின்றி மக்கள் தவிக்கிறார்கள். மக்கள் படும் இந்த கஷ்டத்தை வைத்து அரசியல் கட்சிகள் அவர்களை பயன்படுத்திக் கொள்கின்றன.

இதுதான் சூழ்நிலை இதுதான் நடப்பு என்றிருக்குமானால், தேசத்தின் ஒழுக்க நெறி அழிவது உறுதி. ஒழுக்கநெறி இன்றி புரட்சி நடவாது. அதிகரித்துவரும் பொருளாதார கஷ்டங்களும் பெருகி வரும் ஒடுக்குமுறையும் தானாகவே புரட்சியை கொண்டு வந்துவிடும் என்று எண்ணுபவர்கள் முட்டாள்களாவர். எந்த நாட்டிலும் பிச்சைக்காரர்கள் சேர்ந்து புரட்சியை நடத்தியதாக சரித்திரம் கிடையாது என்பதை அவர்கள் அறியார். சுரண்டப்படும் மக்கள்தான் புரட்சியை நடத்துபவர்களாவர். இவ்விஷயம் நிச்சயமான அர்த்தத்தையும் ஆழமான பொருளையும் கொண்டதாகும். சீரழிந்தவர்கள் புரட்சியின் சக்திகள் அல்ல. மாறாக சீரழிந்தவர்கள் முதலாளித்துவவாதிகளாலும் பாசிஸ்டுகளாலும் எல்லா நாடுகளிலும் புரட்சிக்கு எதிராக பிற்போக்கின் சக்திகளாக பயன்படுத்தப் படுகிறார்கள். அதனால்தான், பொருளாதார கஷ்டங்கள் காரணமாக சீரழிபவர்கள் எங்களில் ஒருவர் அல்லர் என்றும் அவர்கள் புரட்சிகர பாட்டாளிகள் அல்ல என்றும் மார்க்ஸ் முதல் லெனின் வரை மாசேதுங் வரை ஒவ்வொருவரும் கூறினர். புரட்சியின் நலனுக்காக இந்த சீரழிவுவாதத்தையும் புரட்சிகர பாட்டாளிகள் எதிர்த்துப் போரிட்டாக வேண்டும். எனவே வறுமையிலிருந்து மட்டும் புரட்சி உதித்தெழுவ தில்லை என்பது தெளிவாகிறது. வறுமையின் காரணமாக வெடித்தெழுவது கிளர்ச்சி மட்டுமே. அக்கிளர்ச்சியும் இறுதியில் சுரண்டுபவர்களுக்கு சாதகமாகவே முடிகிறது. திசைவழி தவறாக இருந்தால், தலைமையிடம் குறைபாடு இருந்தால், கருத்தியல் தவறு இருந்தால், புரட்சியை பற்றிய தெளிவான அரசியல் கண்ணோட்டம் இல்லையென்றால், நன்கு கட்டமைக்கப்படாத வெகுஜன போராட்டமானது நன்கு கட்டமைக்கப் பட்டிருக்கும் அரசு இயந்திரத்தின் முன்பு தவிர்க்க இயலாமல் தோல்வியையே சந்திக்கும். தொடர்ந்து தோல்வி மனப்பான்மையே மிஞ்சும். மக்களிடம் உள்ள போராட்ட உணர்வு தீர்ந்து போய் விரக்தியும் தோல்வி மனப்பான்மையுமே வெகுஜன இயக்கங்களை கவ்விக் கொள்ளும், சுரண்டும் வர்க்கம் இதை தற்காலிகமாகவாவது நன்கு பயன்படுத்திக் கொள்கிறது. அவர்கள் தங்கள் வர்க்க ஆட்சியை மேலும் ஸ்திரப்படுத்திக் கொண்டு தங்களது அரசியல் அமைப்பையும் குறிப்பிட்ட அளவிற்கு மெருகேற்றிக் கொள்கின்றனர்.

### வெறும் பொருளாதார கோரிக்கைகளை வென்றெடுப்பது மட்டுமல்ல, மாறாக தொழிலாளர்களின் புரட்சிகர அரசியல் அதிகாரத்திற்கு வழிவகுப்பது புரட்சிகர தொழிற்சங்க அமைப்பின் பிரதான பணியாகும்

முதற்கண் நான் உங்களுக்கு லெனின் அவர் களுடைய போதனைகளை நினைவூட்ட விரும்பு கிறேன். ஒரு விஷயத்தைப் பற்றி லெனின் திரும்பத் திரும்ப தொழிலாளர்களை எச்சரித்தார்? காரல் மார்க்ஸ் முதற்கொண்டு பலரும் பல சமயங்களில் இந்த முக்கியமான கேள்வியை பற்றி விவாதித்து இருக்கின்றனர்? தொழிலாளர்கள் தங்கள் பொருளாதார கோரிக்கைகளுக்காகவும் ஜனநாயக கோரிக்கைகளுக்காகவும் எவ்வளவு தான் போர்க்குணமிக்க இயக்கங்களை நடத் தினாலும், கோரிக்கைகளை ரத்தம் சிந்தி வென்றெடுத்தாலும் அவற்றின் மூலம் மட்டும் தங்களுடைய அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்றும் அவர்கள் முன்பு போலவே கூலி அடிமைகளாகவே தொடர்ந்து இருப்பர் என்றும் அவர்கள் வாழ்வைக் கவ்வியுள்ள இருள் தொடர்ந்து நிலைத்திருக்கும் என்றும் அந்த ஆசான்கள் அனைவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

...அதனால் தான் காரல் மார்க்ஸ் ஆரம்பம் முதற்கொண்டு ஒரு கேள்வியை முன் வைத்தார்: தொழிலாளர்கள் ஏன் தொழிற்சங்க இயக்கத்தில் இணைய வேண்டும்? அவர்கள் ஏன் இணைய வேண்டும் என்றால் தொழிற்சங்கம்தான் கம்யூனிசத்தின் பள்ளி ஆகும். அங்குதான் அவர்கள் கம்யூனிசத்தின் கூறுகளை பயில முடியும். இந்த தொழிற்சங்க மேடைகளில் இருந்துகொண்டு அநீதிக்கு எதிராகவும் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் கூட்டாக போராடும்போது, சம்பவங்களை அலசிப் பார்ப்பதற்கும் உண்மையை தேடுவதற்கும் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. புரட்சியின்றி விடுதலை கிடையாது என்பது ஏன்



சிப்தாஸ் கோஷ்

என்ற விழிப்புணர்வு அவர்களுள் உதித்து எழுகிறது. அன்றாட போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும்போது புரட்சியாளர்கள் தவிர வேறு எவரும் தொழிலாளர்களுக்கு இவ்வாறு கல்வி புகட்ட மாட்டார்கள். மற்றவர்கள் அதாவது போலி புரட்சியாளர்கள் தொழிற்சங்கத்தில் தொழிலாளர்கள் இணைய வேண்டும் என்றும் அதில் செயல் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்றும் கூறுவார்களே ஒழிய தொழிற்சங்க இயக்கத்திற்குள் அதிகாரத்துவத்தை கொண்டு வந்து தொழிலாளர்களையும் அதற்கு பழக்கப் படுத்தி விடுவர். இவ்வாறாகத்தான் தொழிற்சங்க இயக்கத்தினுள் அதிகாரத்துவம் தோன்றுகிறது. தாங்கள் பெரிய ஆட்கள் என்பதாக தலைவர்கள் காட்டிக் கொள்வார்கள். அவர்கள் சொல்லுக்கு மிகவும் செல்வாக்கு இருக்கும். அவர்களைக் கண்டு நிர்வாகம் பயப்படவும் புகழவும் செய்யும். பயம், புகழ்ச்சி ஆகிய இரண்டுமே ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை நினைவிற் கொள்க. இந்த தலைவர்களுக்கு இவ்விரண்டுமே தேவைப்படுகிறது. நிர்வாகம் தங்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அதனால் தான் அவர்கள் நிர்வாகத்தை அவ்வப்போது அச்சுறுத்துகிறார்கள்.

தொழிலாளர்களும் கூட, தங்களுக்காக யாரால் சில சலுகைகளை பெற்றுத் தர முடியுமோ அத்தகைய தலைவர்களையே அணுகுகிறார்கள். எனவேதான் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற கட்சியால் நடத்தப்படும் தொழிற்சங்கங்களின் தலைவர்களின் பின்னால் பொதுவாக தொழிலாளர்கள் போகிறார்கள். தங்கள் கோரிக்கைகளை நிர்வாகம் காது கொடுத்து கேட்க செய்வதற்கு இத்தகைய தலைவர்களால் முடியுமென்றும் சில சலுகைகளை பெற்றுத் தருவதற்கு இவர்களால் முடியும் என்றும் தொழிலாளர்கள் நம்புகிறார்கள். தொழிற்சங்க இயக்கத்தின் மொத்த அக்கறையும் இதுவாக ஆகும்போது தொழிலாளர்களின் விடுதலைக்கான போராட்டத்தை ஒரு அடி முன்னெடுத்து வைப்பதற்குகூட இத்தகைய இயக்கங்களால் முடியாது. ஒருபோதும் முடியாது. ...அன்றாட போராட்டங்களில் ஆயிரக்கணக்கில் இணைகின்ற தொழிலாளர்களை அறிவு பூர்வமற்ற சொற் பொழிவுகளால் உணர்ச்சி பொங்கவைத்து அவர்களுடைய கைதட்டலைப் பெற நினைக் காதீர்கள் என்று தலைவர்களைப் பார்த்து மார்க்ஸ் லெனின் மாவோ போன்ற தலைவர்கள் கூறினர். நன்கு அறியப்பட்ட எதிரிக்கு எதிராக வானளாவிய சொற்களால் உங்கள் சொற் பொழிவை நிரப்பி நேரத்தை வீணடிக்காதீர்கள். ஏதேனும் பருண்மையாக கூறுங்கள், உபயோகமாகக் கூறுங்கள். வெற்றிக்கு ஏராளமான சாத்தியங் களைக் கொண்ட இயக்கங்களிலும்கூட குறைபாடுகளைப் பற்றியும் தவறுகளைப் பற்றியும் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டி போராட்ட இயக்கம் பின்னடைவை சந்திக்கும் போது அதற்கான காரணங்களை பற்றி அவர்களுக்கு கல்வி புகட்டி வெளிப்படையாக தெரியும் தோல்விக்குள்ளேயே இருக்கக்கூடிய வெற்றி கூறுகள் என்ன என்பதைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இதுவே தொழிற்சங்க தலைமையின் கடமையாகும்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

## பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தையும் அறநெறியையும் . . .

# பாட்டாளிகளால் மட்டுமே உலகை மாற்றியமைக்க முடியும் என்று மார்க்ஸ் ஒருவர்தான் சுட்டி காட்டினார்

5ம் பக்கத் தொடர்ச்சி

### சரியான அடிப்படை அரசியல் பாதை புரட்சிக்கான அத்தியாவசிய முன் தேவையாகும்

புரட்சிக்காக மக்கள் தங்கள் இன்னுயிரை ஈந்த வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் எத்தனையோ போராட்டங்கள் நடந்தபோதும் எத்தனையோ உயிர்கள் தியாகம் செய்யப்பட்ட போதும் பிற்போக்குத்தனம் எவ்வாறு வலுப்பெறுகிறது? அப்படியானால் இவ்விவகாரத்தின் மையப் பொருள் என்ன? இன்றியமையா விஷயம் என்பது சரியான புரட்சிகர சித்தாந்தமும் சரியான அடிப்படை அரசியல் பாதையும் ஆகும். புரட்சியை நடத்த, நாட்டின் அரசு கட்டமைப்பின் தன்மையைப் பற்றியும், பருண்மையான சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலையைப் பற்றியும் நாம் மிகச்சரியாக கிரகிக்க வேண்டும். சில நாட்களுக்கு முன்பு தன்னுடைய 10ஆவது கட்சிக் காங்கிரசில் சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒரு முக்கியமான விஷயத்தை நோக்கியது. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்படிப்பட்டதொரு பிரம்மாண்டமான கட்சி, மிகப்பெரிய புரட்சியை வெற்றிகரமாக நடத்திய கட்சி, அதன்பிறகு கலாச்சாரப் புரட்சியை நடத்திய கட்சி, அப்படிப்பட்டதொரு பெரிய நாட்டில் வெகுஜனங்களின் மீது மிகப் பெரும் செல்வாக்கை செலுத்தும் கட்சி அப்படிப்பட்ட கட்சிகூட மிக பிரபலமான ஆதரவு தனக்கு இருப்பதாலும் பரந்துபட்ட அளவில் உறுப்பினர் பலம் இருப்பதாலும் ஏராளமான கமிட்டிகள் அதன்பின்னால் இருப்பதாலும் தான் சொல்வதுதான் சரியானது என்று கருதவில்லை. மாறாக, அடிப்படை அரசியல் பாதை சரியாக இல்லையெனில் வெகுஜன ஆதரவும் பலமும், தன்னுடைய ஆளுகையின் கீழ் ராணுவமும், இன்று ஸ்தாபனம் மிகப் பெரியதாக இருந்தாலும் கூட இவற்றையெல்லாம் நீண்ட நாட்களுக்கு வைத்திருக்க முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். பாதை சரியானதாக இல்லை என்றால் இன்றோ நாளையோ எல்லாமே போய்விடும். சரியற்ற பாதைகூட மக்கள் ஆதரவை சில காலத்திற்கு பெற முடியும் என்றும் தவறு எங்கே இருக்கிறது என்பதை மக்கள் தங்களுடைய சொந்த அனுபவங்களிலிருந்து தெரிந்து கொள்ளும் வரை இந்த ஆதரவை வைத்திருக்க முடியும் என்பதையும் இதன் மூலம் தெரிந்துகொள்ள முடியும். இது உண்மை இல்லை என்றால் எவ்வாறு ஹிட்லரால் கேள்விக்கு அப்பாற்பட்ட தலைவராக ஜெர்மனியில் உதிக்க முடிந்தது? சர்வாதிகாரி நாசரும் எகிப்தின் அரசியல் தாதாக்களும் தேசிய தலைவர்களாகத் தோன்றி கம்யூனிஸ்டுகளை ஒடுக்க எப்படி முடிந்தது? எனவே பாதை தவறாக இருந்தாலும் கூட சில சமயம் பிரபலமடைந்து அந்த பிரபலத்தை சில காலத்திற்கு தக்க வைத்திருக்கவும் முடியும். முஸ்லிம் விவசாயிகள், தொழிலாளர்கள், மத்திய தர வர்க்கத்தினர் ஆகியோர் மீது சுதந்திர இயக்கத்தின் போது முஸ்லிம் லீக் கொண்டிருந்த அரசியல் செல்வாக்கு இதற்கு மிகச் சிறந்த சான்றாகும்.

ஆனால் இத்தகைய ஆதரவை நீண்ட காலத்திற்கு வைத்திருக்க முடியுமா? முடியாது. ஆகையால் பிரம்மாண்டமான கட்சியாகிய சீன கட்சியானது பெருமளவு மக்கள் பின்தொடர்ந்த போதிலும் ஏராளமான எண்ணிக்கையில் தொண்டர்கள் இருந்தபோதிலும் ஒரு விஷயத்தை வலியுறுத்துகிறது: ஒரு கட்சி, அதன் அடிப்படை அரசியல் பாதை சரியாக இருக்கும் பட்சத்தில், ஒரே ஒரு நபரை கொண்டு துவக்க பட்டாலும் அது பின்னர் இரு மடங்காகி மும்மடங்காகி அதனுடைய பலம் பல மடங்கு பெருகி அரசியல் அதிகாரத்திற்கு வழிவகுத்து ஒரு நாள் அரசு அதிகாரத்தை கைப்பற்றும் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது. எனவே சரியான அடிப்படை அரசியல் பாதையை வகுப்பது புரட்சிக்கான பிரதான முன் தேவையாகும். காரல் மார்க்ஸ் லெனின் என அவர்கள் அனைவரும் இந்த உண்மையை கோடிட்டுக் காட்டியுள்ளனர் வெவ்வேறு வார்த்தைகளில் சொன்னாலும். பாட்டாளிகளால் மட்டுமே உலகை மாற்றியமைக்க முடியும் என்று சுட்டிக் காட்டியது காரல் மார்க்ஸ் ஒருவரே ஆவார். இந்த உலகை மாற்றுவதற்கான அறிவியல்பூர்வ செயற்போக்கை இயக்கயியல் பொருள்முதல்வாதத்தின் துணைகொண்டு விவரித்தவரும் அவரே. ஆனால் அதேசமயம் அவர் ஒரு எச்சரிக்கையும் விடுத்துள்ளார். பாட்டாளிகளால் உலகை மாற்ற முடியும் என்று சொல்வதன் பொருள் அவர்கள் பாட்டாளிகள் என்ற நிலையில் இருப்பதால் மட்டுமே மாற்றிவிட முடியும் என்று பொருளாகாது. எப்படியாவது ஆயிரக்கணக்காக திரட்டப்பட்ட பாட்டாளிகள் புரட்சிக்காக கோஷம் எழுப்பி புரட்சியை கொண்டுவந்துவிட முடியும் என்று இதற்கு அர்த்தமா? புரட்சியின் கடமையை நிறைவேற்றுவதற்கு அக்கடமைக்கு சரிசமமானவராக தம்மைத் தாமே மாற்றி அமைத்துக் கொள்ளும் பாட்டாளிகளால் மட்டும்தான் புரட்சியை வென்றெடுக்க முடியும்.

### பாட்டாளிவர்க்க கலாச்சாரம் என்பது முதலாளித்துவ சீரழிவிற்கு பலியாகிப் போன சீரழிந்த தொழிலாளர்களின் கலாச்சாரம் அல்ல

புரட்சிகர தலைமைக்கான குணாம்சத்தை பெற்றெடுத்த தொழிலாளர்களால் மட்டுமே உலகை மாற்ற முடியும். அரசியல் போராட்டங்களிலும் கோஷம் போடுவதிலும் மட்டுமின்றி, கேடுகெட்ட முதலாளித்துவ கலாச்சாரத்தின் குறுகிய அடிப்படைலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதன் மூலம் நடத்தை, வாழ்க்கைப் பாங்கு, நீதிநெறி, ஒழுக்கநெறித்தரம், கலாச்சாரம், ரசனைகள் ஆகியவற்றிலும்கூட புரட்சிகர தலைமைக்கான பண்புகளை பெறுவதன் மூலம் மட்டுமே உலகை மாற்ற முடியும். முதலாளித்துவ தனிநபர்வாதம், முதலாளித்துவ சித்தாந்தம், முதலாளித்துவ சமுதாயத்தில் இருந்து கைவரப்பெற்ற அதன் சீரழிந்த கலாச்சாரம் ஆகியவற்றின் தாக்கத்திலிருந்து தொழிலாளர்களை விடுவிக்காதவரை அவர்களுடைய பொருளாதார கஷ்டங்கள் எவ்வளவுதான் அதிகரித்தாலும் அவர்களால் புரட்சியை வெற்றிபெறச் செய்ய முடியாது. தொழிலாளர்களிடம் இருக்கிறது என்பதாலேயே அவர்களால் பிரதிபலிக்கப்படும் முதலாளித்துவ சீரழிந்த கலாச்சாரத்தின் கேடுகெட்ட செல்வாக்கை பாட்டாளிவர்க்க கலாச்சாரம் என்று சொல்ல முடியாது. நற்செயல்களும் தான தர்மங்களும் செய்கின்ற சிந்தனைகளோடு ஒரு சமயத்தில் உழைக்கும் வர்க்க இயக்கத்தில் இணைந்த சிலர், தொழிலாளர்கள் செய்வது பிரதிபலிப்பது எல்லாமே புரட்சிகரமானவை என்று நினைத்தனர். அதனால் தான் இந்தக் கருத்தை காரல் மார்க்ஸ் முதல் லெனின் வரை அனைவரும் தவறு என விளக்க வேண்டியிருந்தது. பாட்டாளிவர்க்க கலாச்சாரம் என்பதன் பொருள், கலாச்சாரமே பாட்டாளி தன்மை கொண்டது அல்ல என்று நினைவூட்டினார். முதலாளித்துவ புரட்சிக்கு உகந்த வகையில் மனிதநேய மற்றும் முதலாளித்துவ சுதந்திர மதிப்புகளின் அடிப்படையில் வளர்ந்த முதலாளித்துவ கலாச்சாரத்தின் சீர்கேட்டிற்கு பலியாகிப் போன படிப்பறிவற்ற பின்தங்கிய தொழிலாளர்களின் மொழியையும் பழக்க வழக்கங்களையும் பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தின் நடைமுறை என்றோ கிரகிப்பு என்றோ தவறாக பொருள் கொள்ளக்கூடாது. அவை, பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற இக்காலகட்டத்தில் பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தின் அடிப்படையிலான சரியான பாட்டாளிவர்க்க கலாச்சார நடைமுறையோ கிரகிப்போ அல்ல. எனவே, அழுகிப்போன முதலாளித்துவ கலாச்சாரம் மற்றும் நிர்க்கதியான வாழ்நிலைச் சுமைகளால் நசுக்கிப் பிழியப்படும் தொழிலாளர்களை விடுவிப்பதற்காக இருப்பதே பாட்டாளிவர்க்க கலாச்சாரமாகும். தலைவிதியே என்று நொந்து கொண்டுள்ள பாட்டாளிகளுக்கு, தங்களுடைய கஷ்டமான வாழ்க்கை தவிர்க்க இயலாதது என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, பொருளாதாரவாதம் சந்தர்ப்பவாதத்தின் விஷச் சூழலுக்குப் பலியாகிப் போனவர்களுக்கு புதிய சித்தாந்தத்தை அவர்களுக்குள் புகுத்தி எதிர்ப்புணர்வுடன் அவர்களை நிமிர்ந்து நிற்கச் செய்து அவர்களை கம்யூனிஸ்டுகளாக மாற்றம் அடையச் செய்வதற்காக உள்ளதே பாட்டாளி வர்க்க கலாச்சாரம் ஆகும்.

...இங்கே அரசு அதிகாரமானது பூர்ஷ்வாக்களிடம் அதாவது முதலாளித்துவ வர்க்கத்திடம் உள்ளது. இந்த அரசை தூக்கி எறிவதற்கான போராட்டம்தான் புரட்சியாகும். தொழிலாளர்கள் போராடுவர், தங்களுக்கான அமைப்பை கட்டியெழுப்புவர். இவை அனைத்துமே, சுரண்டல் முதலாளித்துவ அரசு எந்திரத்தை தூக்கி எறிய வேண்டும் என்ற இறுதி லட்சியத்திற்காக ஏற்படுத்தப்படுவதாகும். இதன் பொருள் அரசு அதிகாரத்திலிருந்து ஒரு வர்க்கத்தை வலுக்கட்டாயமாக தள்ளி விடுவர். குறிப்பிட்டதொரு சமூக பொருளாதார அமைப்பை அகற்றுவதற்கான சம்மட்டி அடியை அவர்கள் கொடுப்பர் என்று பொருள் ஆகும். நாம் ஒரு வர்க்கத்தை அதிகாரத்திலிருந்து அகற்ற வேண்டும் எந்த வர்க்கம் அது? நீங்கள் ஒரு வர்க்க பொருளாதாரத்திற்கு எதிராக சம்மட்டி அடி கொடுக்கிறீர்கள் எந்த வர்க்க பொருளாதாரம், எந்த வர்க்க அமைப்பு முறை அது? முதலாளித்துவ பொருளாதாரம் முதலாளித்துவ சமூக அமைப்பு முறை முதலாளித்துவ அரசு அல்லாமல் அது வேறு ஏதாவதாக இருக்க முடியுமா? ஆனால் இந்த அடிப்படை கேள்வியை குழப்புவதற்காக பலர் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்புகின்றனர். இவற்றோடு கூடவே ஏகபோக முதலாளித்துவவாதிகளுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்புகின்றனர். ஏகபோக முதலாளிகளுக்கு எதிராக எல்லோருமே கோஷங்கள் எழுப்புகின்றனர். சத்ர பரிஷத் மற்றும் யுவ காங்கிரசும்கூட இக் கோஷங்களை எழுப்புகிறது. சிபிஐ, சிபிஐ (எம்) கட்சிகளும் கூட இந்த கூப்பாடுடன் இணைகின்றன. இவர்கள் அனைவரும் இதே புரளியைத்தான் கிளப்பி விடுகிறார்கள். ஆனால் ஏகபோக மூலதனத்திற்கு எதிரான போராட்டம் என்பது ஒரு தனிப்பட்ட ஏகபோக முதலாளியான டாடா, பிர்லா போன்ற குழுமங்களுக்கு எதிராகவா? தனிப்பட்ட நபருக்கு எதிரான போராட்டமா அல்லது ஒட்டுமொத்த முதலாளித்துவம், ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளிகளுக்கு எதிரான போராட்டமா? ஆகவே கோஷங்களை ஒட்டுமொத்த வர்க்கத்திற்கு எதிராக திசை திருப்ப வேண்டும். ஏகபோக முதலாளிகள் தனி வர்க்கம் அல்லர். அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்திற்கு உள்ளேயே இருக்கின்ற ஒரு பிரிவினர் ஆவர், ஒரு குழுவினரே ஆவர். வங்கிகள் மற்றும் தொழில் துறை நிறுவனங்களின் உடைமையாளர்கள் நிதி மூலதனத்தை கட்டுப்படுத்துகிறார்கள். இவர்கள்தான் நிதி ஆட்சி அதிகாரம் செய்கிறார்கள். இந்தக் குழுவினருக்கு எதிராகத்தான் நாம் நமது தாக்குதலை திசை வழிப்படுத்த வேண்டிய முதலாளித்துவ வர்க்கத்தில் தலைவர்கள் ஆவர். ஆனால் தலைவர்களை மட்டும் முன்னுக்கு கொண்டு வந்து நிறுத்தி விட்டு அவர்கள் தலைமை தாங்கி நடத்துகின்ற வர்க்கத்தை விட்டுவிடுவது என்பது பிரதான எதிரியாகிய முதலாளித்துவத்தை, ஒரு வர்க்கம் என்ற வகையில் பூர்ஷ்வாக்களை பாதுகாப்பதாகவே அமையும். வர்க்கத்தையே பாதுகாத்துக் கொண்டு நம்மால் முதலாளித்துவ வர்க்கத்தை தூக்கி எறிய முடியுமா? முன்பே காரல் மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோரும், சில தினங்களுக்கு முன்பு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது காங்கிரசில் சூ என்லாய்யும் இதையேதான் வெவ்வேறு வார்த்தைகளில் கூறியிருக்கின்றனர். நமது போராட்டம் தனிநபருக்கு எதிரானதல்ல என்று அவர்கள் அனைவரும் கூறியிருக்கின்றனர். தனிநபர்கள் வருவர் போவர். ஆனால் முதலாளித்துவ வர்க்கம் இருக்கின்ற வரையில் அது தவிர்க்க முடியாமல்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தையும் அறநெறியையும் . . .

# நமது போராட்டம் தனிநபர்களுக்கு எதிரானதல்ல, ஓட்டுமொத்த முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிரானதாகும்

*6ம் பக்கத் தொடர்ச்சி*

ஏகபோகம் என்ற நிலைக்குப் போயே தீரும். ஏகபோக மூலதனம் என்பது தனிப்பட்ட ஏகபோக குழுமத்தை, உதாரணத்திற்கு பிர்லாக்களை, குறிப்பதல்ல. ஏகபோக மூலதனம் என்பது முதலாளித்துவ உற்பத்தி அமைப்பு முறையில் முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் தவிர்க்க முடியாத விளைவே ஆகும். ஆகவே முதலாளித் துவம் இருக்கின்ற வரையில் மேன்மேலும் அதிக பிர்லாக்களை அது தோற்றுவிக்கும். அதனால்தான், டாட்டா பிர்லாக்கள் அல்லது தனிப்பட்ட ஆலை முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தை, முதலாளித்துவத்தை தூக்கி எறிகின்ற அடிப்படை கோணத்திலிருந்து நடத்தப்படவில்லை என்றால் அதாவது முதலாளித்துவவாதிகளின் வர்க்க ஆட்சியைத் தூக்கி எறிவதற்கான போராட்டத்திற்கு உகந்த வகையில் அவசியமான புரட்சிகர சித்தாந்தம் மற்றும் விழிப்புணர்வின் அடிப்படையில் உழைக்கும் வர்க்கமும் மக்களும் அணிதிரட்டப் படவில்லை என்றால், எவ்வளவுதான் புரட்சிகரமான சொற்றொடர்களால் இந்தப் போராட்டங்கள் நிரம்பி வழிந்தாலும் அவற்றால் முதலாளித்துவத்திற்கு எதிராக சம்மட்டி அடி கொடுக்க முடியாது. ஒரு சின்னக் கீறலைக்கூட ஏற்படுத்த முடியாது...

### புரட்சிக்கு இன்றியமையாத 3 முன்நிபந்தனைகள் சரியான புரட்சிகர கருத்தியல், சரியான அடிப்படை அரசியல் பாதை, ஒரு உண்மையான புரட்சிகரக் கட்சி

ஆகவே லெனின் அவர்களின் போதனைகளை நான் மீண்டும் ஒருமுறை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். புரட்சிக்கு இன்றியமையாதவை சரியானதொரு புரட்சிகர கருத்தியல், சரியானதொரு அடிப்படை அரசியல் பாதை மற்றும் இறுதியாக பாட்டாளிகளின் உண்மையான புரட்சிகரக் கட்சி ஆகியவையேயாகும். இந்த இன்றியமையாத முன் நிபந்தனைகளை நீங்கள் பூர்த்தி செய்யாவிட்டால் கடந்த காலத்தில் நீங்கள் நடத்திய பல்வேறு போராட்டங்களை போல எதிர்காலத்தில் நீங்கள் நடத்தப்போகின்ற மேலும் அதிகமான போராட்டங்கள் வெறும் போலி போராட்டங்களாக ஆகிவிடும். எனவே தொழிற்சங்க இயக்கத்தில் பங்கேற்கும் போது இந்த ஆழமான கேள்விகளைப் பற்றி நீங்கள் விழிப்புணர்வு பெற வேண்டும். நீங்கள் கூட்டு போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும்போது இவை அனைத்தையும் பற்றி ஆழமாகச் சிந்தியுங்கள். உங்களுடைய போராட்டங்களை கட்டி வளர்க்க முயல்கின்ற அதேவேளையில், உங்களுடைய அமைப்பிற்கும் பிற அமைப்புகளுக்கும் இடையே ஏன் வேறுபாடு இருக்கிறது அவ் வேறுபாடுகள் என்ன என்பதை பற்றி எல்லாம் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் வேறுபாடு களுக்கு அப்பாற்பட்டு தொழிலாளர்கள் அனைவரையும் ஒரே சங்கத்தில் சேர்ப்பதுதான் உங்களுடைய நேர்மையான முயற்சியாக இருக்க வேண்டும். இதற்கு என்ன தேவை என்றால் அரசியல் தத்துவார்த்த விவாதங்களில் ஒருவருக்கொருவர் தத்துவார்த்த சகிப்புத்தன்மை கொண்டிருக்க வேண்டும். ஒருவர் தன்னுடைய உயர்தர அரசியல் காரணமாக ஒரு விஷயத்தை பெரும்பான்மையானோரை ஏற்றுக் கொள்ளச் செய்து அந்த சித்தாந்த பலத்தின் அடிப்படையில் தலைமைக்கு வருவாரேயானால் இதில் ஆட்சேபிப்பதற்கு என்ன இருக்கிறது? ஆனால் ஒருவர் பிறருடைய கருத்து சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டை போட்டு, விமர்சனத்திற்கான உரிமையை பறித்து, கமிட்டியில் தனக்கு இருக்கின்ற பெரும்பான்மை பலத்தை மட்டுமே கொண்டு தனது தலைமையை திணிப்பாரேயானால் நிச்சயமாக அங்கே பிளவுகள் குறுங்குழுக்கள் தோன்றியே தீரும். பிளவுவாதமானது நம் அனைவருடைய நேரத்தையுமே வீணடிக்கும். ஏனெனில் இதன் காரணமாக நாம் ஒருவரிடம் இருந்து மற்றவர் விலகிச் செல்வோம். தொழிலாளர்களுக்கு மத்தியில் சரியான முறையிலும் முழு மனதோடும் தரமுயர்வையும் புரட்சிகர விழிப்புணர்வையும் வளர்த்தெடுப் பதற்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ள முடியாமல் போகும். எனவே ஒரு ஒன்றுபட்ட சங்கத்தை கட்டி வளர்ப்பதில் காணப்படும் உண்மையான தடங்கல் யாதெனில் இந்த பொறுமையின்மையும் தத்துவார்த்த சகிப்பின்மையுமே ஆகும். அடுத்தவர்களுடைய கருத்துக்களை நான் கேட்காமல் போனால் அவர்கள் குரல்வளையை நசுக்கினால் விவாதங்களுக்கு தடை ஏற்படுத்தினால் பிளவுகளை தவிர்க்க இயலாது, ஏனெனில் சித்தாந்தத்தை சும்மா காலில் போட்டு மிதித்து விட முடியாது. உங்களுடைய கருத்தை நீங்கள் நம்புவது போல மற்ற நபரும் தன்னுடைய கருத்தை நம்புகிறார். அவருடைய கருத்து தவறாகவே இருந்தாலும்கூட அதை நம்புகிறார். இரு கருத்துக்களுக்கும் இடையே வெளிப்படையான போராட்டத்திற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் கருத்தை என் மீது திணிக்க விரும்பினால் நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். எனவே சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் வெளிப்படையான விவாதங்கள் கலந்துரையாடல்கள் விமர்சனம் எதிர் விமர்சனம் ஆகியன இருக்குமானால் யார் சொல்வது சரி யார் சொல்வது தவறு என்பதை மக்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். உங்களுடைய கருத்து சரியானதாக இருக்குமானால் விவாதத்தை கண்டு நீங்கள் அஞ்சத் தேவையில்லை. உங்களுடைய வெற்றி நிச்சயமாகிவிட்டது. தவறான பாதையில் பயணிப்போர், பொய்யைப் பற்றிக் கொண்டிருப்போர், பலவீனமானவர்கள் ஆகியோர்தான் விவாதங்கள் கலந்துரையாடல்கள் சித்தாந்த போராட்டங்களை கண்டு பயப்படுவர். ஒழுங்கு ஒற்றுமை என்ற பெயர்களில் பல்வேறு சாக்குப் போக்குகளை சொல்லி தங்களுடைய தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் வெளிப்படையான விவாதங்களில் ஈடுபடுவதைத் தடுத்து ஜனங்களையும் குழப்பிவிடுவர். இந்த தவறான பாதையை, போக்கை தயவு செய்து விட்டு விடுங்கள். சுதந்திரமான கருத்து பரிமாற்றங்கள் நிலவட்டும் இதன் போக்கில் ஒன்றுபட்ட போராட்டத்தில் உழைக்கும் வர்க்கத்தை ஒன்றிணைக்க முயலுங்கள்.

நீங்கள் நிச்சயம் போராட வேண்டும். நீங்கள் போராட மாட்டீர்கள் என்பதல்ல இங்கு விஷயம். காரணம், பசி என்பது ஒரு கடுமையான எஜமானி. போராட்டங்கள் எதையும் பெற்றுத் தராது என்று இன்றைக்கு நீங்கள் நினைத்தாலும்கூட நாளைய மறுதினம் உங்களை அது போராட்ட களத்திற்கு உந்தித் தள்ளிவிடும். இதற்கான அறிகுறிகள் ஏற்கெனவே தென்படுகின்றன. ஆயிரக்கணக் கானவர்கள் போராட்டக் களத்தை நிரப்புவர். போராட்டங்களில் ஈடுபடுவர். ஆனாலும் மாற்றம் என்பது மிக தூரத்திலேயே தொடர்ந்து இருக்கும். இந்த மாற்றம் நிகழ்வதற்கு உங்களிடமிருந்து மூன்று விஷயங்கள் கோரப்படுகின்றன சரியான அடிப்படை அரசியல் பாதை, சரியான புரட்சிகர கருத்தியல் மற்றும் உண்மையானதொரு புரட்சிகர கட்சி. உங்களிடம் இவை இல்லை என்றால் உங்களுடைய பாதை தவறாக இருக்குமானால் பிறகு உங்களிடம் நேர்மை தியாகம் அர்ப்பணிப்பு போராட்ட குணம் ஆகியவையெல்லாம் இருந்தபோதிலும்கூட உங்களால் முன்னேறிச் செல்ல முடியாது. லெனினுடைய போதனைகளை மீண்டும் வலியுறுத்தி நான் உங்களுக்கு மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். எவ்வளவு தான் நீங்கள் ஜனநாயக இயக்கங்களை நடத்தினாலும் உங்கள் கோரிக்கைகளுக்காக போராட்டங்கள் பலவற்றை நடத்தினாலும் தியாகிகள் தினம் அனுசரித்தாலும் இயக்கங்களிலும் வேலை நிறுத்தங்களிலும் போலீசை எதிர்கொண்டாலும் ரத்தம் சிந்தினாலும் நீங்கள் முன்புபோலவே அடிமையாகத்தான் இருப்பீர்கள். முதலாளித் துவமும் தொடர்ந்து நிலைத்திருக்கும். சுரண்டலும் தடையின்றி தொடர்ந்து கொண்டிருக்கும். வேண்டுமானால் நீங்கள் ஒரு பத்து ரூபாயோ அல்லது முப்பது ரூபாயோ கூலி உயர்வு பெறலாம். ஏற்கெனவே அதிகமாக இருக்கின்ற விலைவாசி அதற்குள் மேலும் பன்மடங்கு உயர்ந்து விட்டிருக்கும். நீங்கள் மீண்டும் கூலி உயர்வுக்காக போராடுவீர்கள் ரத்தம் சிந்துவீர்கள். ஐந்து ரூபாய் கூலி உயர்வு பெறுவீர்கள் ஆனால் பொருட்களின் விலை மீண்டும் அதிகரித்துவிடும். இதைவிட முக்கியமானது யாதெனில் இந்த நிச்சயமின்மையும் இலக்கின்மையும் உங்கள் வாழ்வில் விரக்தியையும் ஒழுக்கச் சீர்கேட்டையும் கொண்டு வந்துவிடும். நீங்கள் எந்த குடும்பத்தை சுற்றி உங்கள் சந்தோஷ கோட்டையை கட்டி வைத்தீர்களோ அதே குடும்பம் அதில் இருக்கின்ற மிகவும் அன்னியோன்யமான மதிப்புமிக்க உறவுகள் எல்லாம் இந்த தற்போதைய சமுதாயத்தின் சமூக சீர்கேட்டின் தாக்கத்திலிருந்து தப்பிக்க முடியாது. மாறாக, இச் சீர்கேடுகள் குடும்பத்திற்குள்ளும் உறவுகளுக்கு உள்ளும் புகுந்து செல்லரித்து விடும். நீங்கள் ஒரு இனிய இல்லத்தை பற்றி நினைத்துக் கொண்டிருப்பீர்கள். சந்தோஷ கனவுகளை வளர்த்துக் கொண்டிருப்பீர்கள். வீட்டிற்குச் சென்று பாருங்கள் உங்களுடைய கனவு எப்படி சிதைந்து கிடைக்கிறது என்று. உங்களுடைய வாழ்க்கை துணையாக நீங்கள் தேர்ந்தெடுத்த மனைவியிடம்கூட உங்களால் காதலை காண முடியாது அமைதியை பெற முடியாது. சமுதாயத்தில் ஸ்திரத்தன்மை என்பது எங்குமே இல்லை. காதல்கூட அதன் சாராம்சத்தையும் அழகு உணர்வையும் இழந்து விட்டது. நீங்கள் எந்த குழந்தைகளுக்காக எல்லா வலிகளையும் தாங்கிக் கொண்டீர்களோ எல்லா கஷ்டங் களையும் பொறுத்துக்கொண்டு அவர்களுடைய நலனுக்காக என்று வரும்போது எதுவுமே உங்களுக்கு குறுக்கே நின்றதில்லை என வாழ்ந்தீர்களோ அப்படிப்பட்ட குழந்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக போய்விட்டு இருக்கும். ஒரு குழந்தை ஒரு சினிமா ஸ்டாரின் விசிறியாக இருக்கும். மற்றொன்று விளையாட்டு வீரரின் ரசிகனாக இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், வெளியில் நடக்கின்ற போராட்டங்கள் சண்டைகளில் இருந்து விலகி நின்று அரசியலிலிருந்து விலகி நின்று தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று நீங்கள் உங்களுடைய சொந்த கனவு உலகத்தில் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு வெறுமனே அலுவலகம் சென்று திரும்பி வீட்டிற்கு வந்து உண்டு உறங்கிக்கொண்டிருக்கும் வாழ்க்கை வாழ்ந்து கொண்டே இருந்தால்கூட, உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்களால் காப்பாற்றிக் கொள்ள இயலாது. சமூகப் பிரச்சினைகள் என்ற பூதம் உங்கள் வீட்டிற் குள்ளும் ஆட்டிப்படைக்கும். உங்கள் சொந்த வாழ்க்கையையும் கெடுக்கும். உங்கள் காதலை கொல்லும். அன்பையும் பாசத்தையும் தவிடுபொடி யாக்கும். மனிதனாக வாழ்வதற்கு நீங்கள் போராட வேண்டும். அதிலும் உங்கள் போர் என்பது சரியான புரட்சிகர பாதையில் இருக்க வேண்டும். வெறுமனே புரட்சி ஓங்குக என்ற முழக்கம் ஒன்றே உங்களை புரட்சியின் பாதைக்கு இட்டுச் செல்லாது. ஒரு சரியான புரட்சிகர கட்சியின் தலைமையின் கீழ் நீங்கள் தொழிலாளர் களை அணிதிரட்டி, புரட்சியின் தந்திரத்தை பற்றிய சரியான கருத்துக்கள் மற்றும் அரசின் வர்க்க குணாம்சத்தை பற்றிய சரியான கருத்துக்களின் மீது வளர்த்தெடுக்கப்பட்ட போதிய அரசியல் விழிப்புணர்வை அவர்களுக்கு ஊட்டுவதன் மூலம் தான் மக்களின் சொந்த அரசியல் அதிகாரத்திற்கு உங்களால் வழிவகுக்க முடியும். அப்போதுதான் உண்மையில் அரசியல் ரீதியாக அதிகாரத்தை அடைய முடியும். அதன்பிறகுதான் கோடானுகோடி பாடுபடும் இந்திய மக்கள் புரட்சியை நடத்தக்கூடிய அந்த போற்றத் தகுந்த சமயம் வரும். அதுவரையில், கிளர்ச்சியும் தோல்வியும் மட்டுமே இருக்கும். பொங்கி எழுதலும் நொந்து போதலுமே இருக்கும். இவை எல்லாவற்றிலிருந்தும் விடுதலைக்கான பாதை சமூக விடுதலை மனித இனத்தின் விடுதலை ஆகியவை புரட்சியின் மூலம் மட்டுமே நடக்கும். புரட்சி மட்டுமே ஒரே வழி. வேறு வழி எதுவுமில்லை ■

**புரட்சி ஓங்குக!**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# ஒடிசாவில் பயணிகள் ரயில்கள் விபத்து குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

*ஒடிசாவில் பயணிகள் ரயில்கள் மற்றும் சரக்கு ரயில் மோதிய கோர விபத்தில் இறந்த, காயமடைந்த மக்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிப்பதோடு பாதிக்கப்பட்டோருக்கு அனைத்து உதவிகளையும் நிவாரணம் மற்றும் நஷ்ட ஈட்டையும் அரசாங்கம் வழங்க வேண்டுமெனவும் விபத்திற்கு ரயில்வே அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கோரி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் கமிட்டி **03.06.2023** வெளியிட்ட அறிக்கை:*

இந் நூற்றாண்டிலேயே இந்தியாவின் மிகக் கொடிய விபத்து என கருதப்படும், ஒடிசாவின் பாலாசோர் ஜூன் **2** இரவில் கோரமண்டல் அதிவிரைவு ரயில், யஷ்வத்பூர் அதிவிரைவு ரயில் மற்றும் சரக்கு ரயில் என மூன்று ரயில்கள் மோதிய கோர விபத்தில் இதுவரை **237** பயணிகள் உடல் மீட்க்கப்பட்டதாகவும் சுமார் ஆயிரம் பேர் காயமடைந்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன. இத் துயரச் சம்பவம் எம்மையும் நாட்டு மக்களையும் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. இறந்தோர் மற்றும் காயமடைந்தோர் எண்ணிக்கை உண்மையில் அதிகமாக இருக்கும். ஏனெனில் முன்பதிவு செய்யா பயணிகள் மற்றும் புலம் பெயர் தொழிலாளர்கள் எண்ணிக்கை இந்த ரயில்களில் ஏராளமாகும். இவர்களைப் பற்றி எந்த தகவலும் ரயில்வேயிடம் இருக்காது என்பது தெளிவு.

நீண்டகாலமாக அத்தியாவசியப் பணிகளான தண்டவாள பராமரிப்பு, ரயில் இன்ஜின் பெட்டிகள் பராமரிப்பு, சமீபத்தில் டிராஃபிக் சிக்னல் பராமரிப்பு போன்ற பணிகளில் அலட்சியம், செலவைக் குறைக்கிறோம் என குறைந்த நிதி ஒதுக்கீடு, ஆட்குறைப்பு, ஒப்பந்தப் பணிகளாக மாற்றல் போன்ற தவறான நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவே இக் கோர விபத்திற்கு காரணமாகும். எனவே இது விபத்தல்ல, அரசாங்க செய்கையால் ஏற்பட்ட மரணங்கள் ஆகும். குறிப்பாக ஏழை நடுத்தர மக்களும் புலம்பெயர் தொழிலாளர் களும் கோடிக்கணக்கில் பயணிக்கும் இவ்வழித் தடங்களில் முன்பதிவு செய்யப்படாத மற்றும் இரண்டாம் வகுப்பு பெட்டிகளின் எண்ணிக்கைகள் குறைக்கப்பட்டு காசு சம்பாரிக்க வேண்டும் என்ற சிறுமதியுடன், சாதா பெட்டிகளை குளிர்சாதன வகுப்பு பெட்டிகளாக மாற்றி, எளிய மக்களை மந்தைகளைப் போல் அடைத்துக்கொண்டு இந்த ரயில்கள் ஓடுவது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். இவ் வழித்தடங்களில் பல்லாண்டுகளாக ரயில்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. இவையெல்லாம் விபத்தின் சாத்தியக் கூறுகளையும் உயிரிழப்பு எண்ணிக்கையையும் அதிகரிக்கும் எனத் தெரிந்தும் அரசாங்கம் உரிய நடவடிக்கையை இதுவரை எடுக்கவில்லை.

துயர்மிகு இவ்வேளையில் விபத்தில் உயிரிழந்தோர் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை மாநில கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது. காயமடைந்தோர் விரைவில் குணமடைய தக்க சிகிச்சையை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். இவ்விபத்திற்கு காரணம் மத்திய அரசாங்கமும் அதன் ரயிவே அமைச்சர்களும் அத் துறையின் உயர் அதிகாரிகளுமே என்பதால் உரிய விசாரணை நடத்தி அவர்களுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் எனக் கோருகிறோம்.

பாதிக்கப்பட்டோருக்கு அனைத்துவகையிலும் விரைந்தோடி வந்து உதவி நல்கிவரும் மக்களை பாராட்டும் அதே சமயம், பாதிக்கப்பட்டோருக்கு துணை நிற்குமாறு மக்களை வேண்டிக் கொள்கிறோம். அதே வேளையில், எதிர்காலத்தில் இத்தகு சம்பவங்கள் நிகழாமல் இருக்க, ரயில்வே துறை தனியார்மயத்தை முற்றிலும் கைவிட வேண்டும், பாதுகாப்பில் சமரசமின்றி செயல்பட வேண்டும், பொறுப்பற்ற அமைச்சர்கள் அதிகாரிகளை கருணைகாட்டாமல் தண்டிக்க வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தி வலுவான இயக்கத்தையும் வளர்த்தெடுக்க முன் வரவேண்டும் என மக்களை கேட்டுக் கொள்கிறோம் ■

## ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தோருக்கு இரங்கல் கூட்டம்



மதுரை



சென்னை




கோட்டயம்

# மல்யுத்த வீராங்கனைகளின் போராட்டத்தில் காவல்துறையின் தலையீட்டை கண்டித்து நடைபெற்ற இயக்கங்கள்




கொல்கத்தா



சென்னை




வத்தலக்குண்டு




மதுரை



சென்னை




தேனி

டெல்லியில் ஜந்தர் மந்தர் பகுதியில் நடைபெற்ற மல்யுத்த வீராங்கனைகளின் போராட்டத்தில் காவல்துறையின் தலையீட்டை கண்டித்தும், பல்வேறு அமைப்புகளின் தலைவர்களை, வீராங்கனைகளை, கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். போராட்ட இயக்கத்தில் காவல்துறை தலையீடுக்கூடாது. மல்யுத்த வீராங்கனைகளை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய பிரிஜ் பூஷன் சரண் சிங்கை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று கோரி அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO), அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS), அகில இந்திய விவசாய விவசாயத் தொழிலாளர் சங்கம் (AIKKMS), அகில இந்திய யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர் (AIUTUC) இந்திய முழுவதும் பல்வேறு இயக்கங்களை நடத்தியுள்ளன ■

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18),* இராட்லர் தெரு, சூளை, சென்னை *600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**